பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு ஆவணி மீ 05 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 07 ( 21 - 08 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 162

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22 , நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

### தட்டுப்பாடு வராது தடுக்க

# வவுனியாவிலிருந்து பவுசர்கள் மூலம் எரிபொருள்கள் வரும்

## இறுதி ஏற்பாடுகள் கொழும்பு மாநாட்டில் பூர்த்தியாகிவிடும்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 21

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு, பவுசர்களின் மூலம் எரிபொருள்களைத் தருவிக்க, பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளைச் செய்யவுள்ளது.

ரயில் சேவை தடைப்பட்டதால், எரிபொருள் தட்டுப்பாடு உண்டாகாமல் தடுப்பதற்காகவே, பவுசர்கள் மூலம் தருவிக்கும் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப் பட உள்ளது.

இது சம்பந்தமாக இவ்வாரம் கொழும்பில் நடைபெறும் மாநாடு ஒன்றில் இறுதி ஏற்பாடுகள் முடிவு செய்யப்பட்டுவிடும்.

வவுனியாவரை ரயில் மூலம் எரிபொருள்களை எடுத்து வந்து அங்கிருந்து பவுசர்கள் மூலம் கொண்டு வரும் திட்டம் ஏற்கனவே பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்தால் உத்தேசிக்கப்பட்ட ஒன்றாகும்.

இந்தத் தீர்மானம் ஏற்கனவே வாரத்திற்கொருமுறை எரிபொருள் ரயில் வந்து சென்றபோது ஏற்பட்ட எரிபொருள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவென்று வகுக்கப்பட்டது.

தற்பொழுது வடபகுதிக்கு எரிபொருள் ரயில் முற்றாக வராததை அடுத்து ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட திட்டத்தை உடனடியாக அமுல் செய்ய முடிவாகி உள்ளதாக பெற்ரோலியம் கூட்டுத்தாபன வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பிரஸ்தாப திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான இறுதி ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காகக் கொழும்பில் அவசர மாநாடு ஒன்று இந் வாரம் நடைபெற இருக்கிறது.

கடந்த ஆறும் திகதி எரிபொருள்களை ஏற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### செயலகம் நாளை முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக 21

யாழ். செயலகத்தின் அத்தியாவசியப் பிரிவுகள் மீண்டும் நாளை 22 ஆம் திகதி முதல் இயங்க உள்ளன.

செயலகம் இயங்கும் நாட்களில் இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகளுக்கான 2 ஆம் கட்ட நிவாரண விண்ணப்பப் படிவம்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

### அமைதிப் படை அறிவிப்பு

# யாழ்.- கொழும்பு சேவை: தனியார் பஸ்களுக்கு புதிய கட்டணம்

## மீறுவோரின் பஸ்கள் பறிமுதலாகும் என எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 21

யாழ்ப்பாணத்துக்கும்– கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் மற்றும் மினி பஸ்களுக்கு புதிய கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் இந்தப் புதியகட்டணங்கள் அமுலுக்கு வரும்.

புதிதாக நிர்ணயிக்சப்பட்டுள்ள கட்டணங்களை விட கூடுதலான கட்டணங்களை அறவிடுவோரின் பஸ்களை இந்திய அமைதிப்படை பறிமுதல் செய்யும்.

இது சம்பந்தமாக யாழ் நகரக்கொமாண்ட் அலுவலகம் நேற்று ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு மிடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் ஒவ்வொரு பிரயாணியிடம் இருந்தும் 100 ரூபாவைக் கட்டணமாக அறவிட வேண்டும். மினி பஸ்கள் 90 ரூபாவை ஒவ்வொரு பிரயாணிகளிடம் இருந்தும் அறவிடவேண்டும்.

பிரயாணத்தின் போது சலுகைக் கட்டணத்தில் பிரயாணிகளுக்கு உணவு விநியோகிக்கும்தனியார் பஸ் கம்பெனிகள் ஒவ்வொரு பிரயாணிகளிடம் இருந்தும் 120 ரூபாவைக் கட்டணமாக அறவிடவேண்டும்.

இந்தப் புதிய கட்டணங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

சம்பந்தப்பட்ட கட்டண விவரங்கள் யாவும் ஒவ்வொரு பஸ்ஸிலும் பிரயாணிகளின் பார்வைக்காக அவற்றின் முன்பக்கக் கண்ணுடியில் ஒட்டப்பட்டிருக்க வேண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வளைகுடாவில் நேற்றுக் காலை 8.30 முதல் யுத்த நிறுத்தம் அமுல்

வளைகுடாவில் நேற்றுக் காலை 8.30 மணி முதல் (இலங்கை நேரப்படி) யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

24 நாடுகளைச் சேர்ந்த ஐ. நா. அவதானிகள் 1,200 மைல் பிரதேச எல்லையில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணித்து வருவார்கள்.

ஈரான் தலைநகர் தெஹ்ரான், ஈராக் தலைநகரான பக்தாத் ஆகிய இடங்களில் மக்கள்யுத்த நிறுத்தத்தைக் குதூகலத்துடன் வரவேற்றனர்.

ஈராக்கின் பிரதான நகரங்களில் 101 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு யுத்த நிறுத்தம் வரவேற்கப் பட்டது.

ஈரான், ஈராக் நாடுகளுக்கு இடையேயான நேரடிப் பேச்சுக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை ஐ நா. மேற்பார்வையில் ஜெனீவாவில் ஆரம்பமாக உள்ளன.

சர்வதேச எல்லைக்கு துருப்புக்கள் விலக்கப் படுவது, யுத்தக் கைதிகளை விடுதலை செய்வது. போன்ற விஷயங்கள் குறித்து நேரடிப் பேச்சுக்கள் இடம்பெறும்.

(ஓ–எ)

# சிறையில் உள்ளவர்களின் குடும்பங்களுக்கு உடுபுடைவை

யாழ்ப்பாணம், ஆக 21

பூஸா, வெலிக்கடை, பலேவத்தை மற்றும் இராணுவ தடுப்புமுகாம்களில் இருப்போரில் தங்கி வாழும் குடும்பங்களுக்கு உடுபுடைவைப் பார்சல்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் உள்ள பொது ஸ்தாபனங்கள் வழங்கிய இப் பார்சல்கள் நாளையும் அதன்பினனர் 25, 26, 28 ஆகிய திகதிகளிலும் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களால் சிபார்சு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மட்டும் இப் பார்சல்கள் வழங்கப்படும்.

பார்சல்கள் வழங்கப் படும் திகதி இடம் ஆகிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் தாக்குதல்

கொழும்பு, ஆக 21

கல்முனையில் இந்திய அமைதிப்படை வாகனம் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினர்கள்.

படையினர் தாக்குதலை முறியடித்தனர் என்றும், பொதுமக்களில் ஒருவர் மரணம் அடைந்தார் என்றும் அறிவிக்கப் பட்டது. (அ)

# பளையில் நேற்று படையினர் தேடுதல்!

வடமராட்சி கிழக்கில் கடந்த சிலநாட்களாக இடம்பெற்று வந்த சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகள் தற்போது, பச்சிலைப்பள்ளி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுக் காலை பளை பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்கள் வீடுகளிலிருந்து வெளியே கூட்டிச் செல்லப்பட்டு வீதியில் ஓர் இடத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டுசுட்டானில் நேற்று பெண்கள் உண்ணாவிரதம்

## அமைதிப்படை முகாமுக்குச் சமீபமாக

—உதயன் ஒட்டுசுட்டான் செய்தியாளர்—

ஒட்டுசுட்டான் ஆக 21

ஒட்டுசுட்டான் அமைதிப் படை முகாமுக்குச் சமீபமாக நேற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

★ கடந்த 5 ஆம் திகதி கற்சிலைமடு கிராமத்தைச் சுற்றிவளைத்து கைது செய்யப்பட்டோரை இதுவரை விடுவிக்காததற்கு ஆட்சேபம் தெரிவித்தும்–

★ கடந்த 15 நாட்களாக தடுத்து வைக்கப் பட்டிருப்போரை இதுவரை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அவர்களுக்கான உணவை ஏற்க மறுத்த நடவடிக்கையைக் கண்டித்தும்–

★ சம்பந்தப்பட்டோரை விடுவிக்குமாறு பிரசைகள் குழு மூலம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைக்கிருர் பந்த்

கான்பூர், ஆக 20

தமிழீழ விடுதலைப் புலிகள் வன்முறைகளை விட்டுவிட்டு, பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும். அமைதி திரும்ப உதவ வேண்டும்.

இலங்கையில் அமைதி திரும்பும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. ஸி. பந்த் தெரிவித்தார்.

கான்பூரில் இருந்து புதுடில்லிக்கு விமானத்தில் திரும்பிக்கொண்டிருந்த போது அமைச்சர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போதே அமைச்சர் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இந்திய – இலங்கை அமைதி ஒப்பந்தம் பூரணமாக அமுல் நடத்தப்படும்வரை அமைதிப் படை இலங்கையில் தொடர்ந்து இருக்கும்.

ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாக வாழவேண்டும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் தமிழ்நாட்டு மீனவர்கள்

தமிழ்நாடு இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீன்பிடி இழுவைப் படகு ஒன்று நெடுந்தீவில் கரை ஒதுங்கியது.

இதில் வந்த ஐந்து மீனவர்கள் நெடுந்தீவில் தங்கியுள்ளனர்.

மீன்பிடி இழுவைப் படகு இயந்திரக் கோளாறு காரணமாகப் பழுதடைந்து காற்றினுல் அள்ளுண்டு நெடுந்தீவு தெற்குக் கடற்கரையில் ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ–111)

## ஸியாவின் ஜனஸா நல்லடக்கம்

அதிபர் ஸியா – உல் – ஹக்கின் ஜனஸா நேற்றுப் பிற்பகல் இஸ்லாமபாத்தில் பைசல் மசூதி வளவில் இராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வெளிநாட்டுப் பிரமுகர்கள், ஜனதிபதிகள், பிரதமர்கள், வெளியுறவு

(8ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

21 – 08 – 88

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
09.05முதல் 10.35வரை

ராகுகாலம்:
04.35முதல் 06 05வரை

# யாழ் வைத்தியசாலையில் தாதிமார் பற்றுக்குறை

## வெற்றிடங்கள் நிரப்ப முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ் போதனு வைத்தியசாலையில் தாதிமார் பற்ருக்குறை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. தேவையோடு ஒப்பிடுகையில் 50 வீதமான வெற்றிடங்கள் நிரப்பப் படமுடியாத நிலையில் இருக்கின்றன.

இவ்வாறு யாழ் போதனு வைத்தியசாலை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

முதலாந்தரத் தாதிமார்கள் 24 பேர் தேவைப்படுகிருர்கள். தற்பொழுது ஒரே ஒருவர்தான் கடமை புரிகின்ருர். இரண்டாம் தரம் 'ஏ', 'பி' பிரிவுகளில் 384 பேர் கடமை புரிவதற்குத் தேவை. ஆனல் 208 பேரே கடமை புரிந்து வருகின்ருர்கள். எல்லாமாக 199 வெற்றிடங்கள் நிரப்பப்பட

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எட்டு வருஷ யுத்தம் முடிவுக்கு வாறது அப்ப உறுதிப்பட்டுப் போச்சு எண்டு சொல்லுங்கோ...!

### ஷப்ரு கிண்ணப் போட்டி:

# இறுதி ஆட்டம் இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஆக.21

'ஷப்ரு' கிண்ணத்துக்காக ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறும்,

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை 9மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதும்.

நேற்று நடைபெற்ற அரைஇறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்றதன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர்கள் டில்லி விரைவு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர்கள் உட்பட கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் திரு. பி. கிருபாகரன் ஆகியோர் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்று உள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட அழைப்பின் பேரிலேயே இவர்கள் டில்லி புறப்பட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில்மட்டக்களப்பிலுள்ள இந்திய இராணுவ அதிகாரிகள் இந்தக் குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்து அண்மையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்கள். (ஓ–ஐ)



சுன்னுகத்தில்
நாளை
மகராசி ரெக்ஸ்
மங்களகரமான
திறப்பு விழா
அன்புடையீர்!
நிகழும் விபவ ஸு
ஆவணி மாதம்
6ஆம் திகதி (22-08-88)
நாளை திங்கட்கிழமை
மு.ப. 11.35 தொடக்கம்
பி.ப. 1.30 வரையிலான
சுபவேளையில்
சுன்னுகம் சந்தியில்
அமைந்துள்ள எமது
" மகராசி ரெக்ஸ் "
ஸ்தாபனத்தைமங்களகரமாக
ஆரம்பித்து வைக்க
இறையருள் கூடியுள்ளதால்,
அத்தருணம் நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவரையும் சமுகம் தந்து
சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்ருேம்.
— உரிமையாளர்:
மகராசி ரெக்ஸ் பிரதான சந்தி, சுன்னுகம்.
(C 6284)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த முதிரை கட்டில்கள், மேசைகள், 3 வெளி இரும்பு கிறில் போட்ட யன்னல்கள், நிலைகள், கதவுகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: சுசலஷ்மி ஸ்ரோர்ஸ், மாட்டீன் ரோட், யாழ்ப்பாணம். (5919)

பருத்தித்துறை சிவன் கோயில் மேற்குப் பக்கமாக பிரதான வீதியில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. கணேசராசா, சட்டத்தரணி, தம்பசெட்டி, பருத்தித்துறை. (5832)

புதிய Honda - Reconditoned, புதியபழைய Model C 90, C 70, C 50, CD 50, MD 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No 16, சண்டிவீதி, யாழ்ப்பாணம். (உதவி அரசாங்க பணிமனை முன்பாக) [5836]

### காணி விற்பனைக்கு

நுணுவில்கண்டி வீதிக்கு அண்மையில் கல்வயல் ரோட்டில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5914)

யாழ் /-வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடியில் டிஸ்பென்சரிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நல்ல சுற்றுடலில் உள்ள காணி தொடர்பு: 17, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (5910)

வேலணை கிழக்கு பெருங்குளத்திற்கும்வடக்குப் புறமாக புங்குடுதீவு ரோட்டிற்கு அண்மையில் தோட்டமும் வயலுமாக 45 பரப்புக் காணி ஒன்று விற்பனைக்கு உண்டு. உடனே தொடர்பு கொள்க. இல. 330C/o உதயன் யாழ்ப்பாணம். (5904)

### காணி, வயல் விற்பனை

திருநெல்வேலியில் தோட்டக்காணி 6 பரப்பு; அரியாலையில் வயல் பரப்பு 40; கண்டி ரோட், அரியாலையில் 5 பரப்புகாணி விற்பனைகுண்டு. தொடர்பு:- K. Pathmanathan, Tropical Sun Blest Fruit, Company 1st Floor. 34, Manipay, Road, Jaffna. (5909)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hy-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

### மைசூர் No.1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது. No.1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம், நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

### BOSCH FRIDGE விற்பனை

புதிய Bosch Fridge (இரண்டு கதவுள்ளது) Kenwood Food Proccessor, Sandwich, Maker, Bread, Toaster, Steam Spray dry Iron உடனடியாகவிற்பனைக்கு உண்டு. புதிய எண் 857, நாவலர்வீதி, (ஸ்ரான்லி கல்லூரிக்கு அண்மை) யாழ்ப்பாணம். (5911)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

## தேவை

### கடைத் தளபாடம் தேவை

கடைக்குரிய தளபாடங்கள் தேவைப்படுகின்றன. Show Case ரக்கை, 5அந்தர் தராசு குளிர்சாதனப்பெட்டி, ஆகியவையாகும். தொடர்பு 335, C/o உதயன் யாழ்ப்பாணம். (5916)

### உதவியாளர் தேவை

விந்தியா பார்மசி & குரோசறியில் பணிபுரிய ஒருவர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தகமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். 83, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [5839]

### மணமகள் தேவை

யாழ்/இந்து வேளாள 37 வயதுடைய லண்டன் பிரஜாவுரிமையுள்ள பொறியியலாளருக்கு படித்த நற்குணமும் அழகும் நிறைந்த பெண் தேவை. சாதகத்துடன் முழு விபரங்களையும் முதல் கடிதத்திலேயே தொடர்பு கொள்ளவும். இல. 334, C/o உதயன் யாழ்ப்பாணம். (5913)

### பட்டதாரி மணப்பெண் தேவை

யாழ். இந்து வேளாளர் குல, B.Sc. பட்டதாரிக்கு, 33 வயதிற்கு உட்பட்ட நற்பண்பு அழகுடைய தொழில் புரியும் விஞ்ஞான/கலைப்பட்டதாரி, அல்லது கணக்கியல், கம்பியூட்டர் துறையைச் சார்ந்த மணப்பெண் தேவை, சீதனம் நேரில் கதைத்துக் கொள்ளலாம். தொடர்பு: 333 C/o உதயன் யாழ்ப்பாணம். (5912)

## சேவை

சிறந்த முறையில் இங்கு சுதிரைகள் பின்னிக் கொடுக்கப்படும். P. J. நிர்மலரூஜ் (யூலி) 12/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குழி, யாழ்ப்பாணம். (5828)

### திருமண சேவை

விஞ்ஞான பட்டதாரிகள் T. A, B. Com I. C. M. A ACC (செவ்வாய்) போன்ற மணமக்கள் எம்மிடம் உண்டு. கடிதம் மூலம் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: சுவாமியார் இராசகுலசிங்கம் 11/7, பண்டாரக் குளம், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (5915)

### தவறிவிட்டது

சரபாலகிருஷ்ணன் ரமேஷ்குமார் ஆகிய எனது அடையாள அட்டை இல. 701250338 V ஆனைப்பந்திக்கும் ஐந்து முச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதை கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5838)

தங்கராஜா - ஜயந்திமலர் ஆகிய எனது அடையாள அட்டை இல: 66602043 V மனோகராத்தியேட்டருக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் பேர்ஸுடன் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5833)

### செயல்நூல் வெளியீடு

தமிழ்-ஆண்டு2 (10/-) கணிதம்-ஆண்டு1 (10/-) கணிதம்-ஆண்டு2 (13/-) சிறுவர்களுக்கானசிறந்த பயிற்சி நூல் பெற்றுக் கொள்ள, திருமதி P. தம்பிராசா "கானுன்" நவாலி கிழக்கு மானிப்பாய். (5908)

### WIN INN LADIES ACADEMY

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம், விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புகளும் கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகளாகிய வயலின், வீணை, கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் காலை9-12மணி61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி. (5827)

## செப்டம்பரில் சம்பள உயர்வு வழங்கப்படும்

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம், ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தின் நாலாவது திருத்த — புதிய சம்பளத்தை வழங்கவுள்ளது.

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பகுதியிலுள்ள சுமார் ஆயிரத்து நூறு ஆசிரியர்களுக்குமான புதிய சம்பளம் சம்பளப் பாக்கியுடன் செப்டம்பர் மாதம் வழங்கப்படுமென வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி தெரிவித்தார். (உ-118)

இராணுவ நடவடிக்கைகளினால்

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு கல்வி நிதி

பருத்தித்துறை, ஆக 21

யாழ். மாவட்டத்தில் இதுவரை இராணுவ நடவடிக்கையினுல் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் 26 மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ ராமக்கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கல்வி நிதியாக ரூபா ஆயிரம் வீதம் இந்த மாணவர்களுக்கு வழங்கியுள்ளது.

இவர்களுக்கான நிதியைப் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புச் சான்றிதழாக வழங்கப்பட்டுள்ளதென பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள மாணவர்கள் தத்தம் கிராம சேவக அலுவலர்களின் சிபார்சுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (ஒ-118)

## பண்டத்தரிப்பு சந்தையில் பதற்றமும் பரபரப்பும்

பண்டத்தரிப்பு, ஆக. 21

வதந்தியால் பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் சடந்த வியாழக்கிழமை காலை பதற்றமும் பரபரப்பும் நிலவியது.

இதுபற்றித் தெரிய வருவதாவது:-

கடந்தபுதன்கிழமைவட்டுக் கோட்டை தொகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக பண்டத்தரிப்பு சந்தையும் கூடவில்லை.

இதை இந்திய அமைதிப்படை விரும்பவில்லை; என்றும் அதனுல் கடைகள் அனைத்தும் ஒரு வாரகாலம் தொடர்ந்து பூட்டியபடியே இருக்க வேண்டும் என்றும் புதன் இரவு சந்தைப்பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததாக ஒரு வதந்தி வியாழன் காலை பரப்பப்பட்டிருந்தது.

இதனாலேயே சந்தைப் பகுதிக்கு வந்த மக்கள் முகங்களில் பீதியும் அவசரமும் காணப்பட்டது.

எனினும் காலை 10மணியளவில் படையினர் சந்தைப் பகுதியை அமைதியாகக் கடந்து போனதைக் கண்டபின் மக்கள் நிம்மதி அடைந்தனர். (ஒ-120)

## 29 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக 21

வேலணை கல்விக் கொத்தணிப் பாடசாலைகள் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும்.

இதன் காரணமாக இம்மாதம் 25 ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த கொத்தணி மெய்வல்லுனர் போட்டியும் பின்போடப்பட்டுள்ளது. போட்டித் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (ஒ-9)

### தோட்டத்துரை வீட்டில் கொள்ளை

அக்குரஸ்ஸவில் தோட்டத்துரை ஒருவரின் பங்களாவுக்கு நுழைந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகளை அபகரித்துச் சென்றனர் என்று முறையிடப்பட்டது.

கடந்த வார இறுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது. (ஒ-ஏ)

## வட்டு. பகுதியில் கோமாரி நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 21

வட்டுக்கோட்டை கால்நடைப் பிரிவில் கோமாரி நோய்க்கான தடுப்பூசி கடந்த சில தினங்களாக வழங்கப்பட்டு வந்தது.

வட்டுக்கோட்டை சங்கரத்தை மாதர் சங்கம், மூளாய் பிள்ளையார் கோயிலடி, காரைநகர் ஆயிலி(R. D. S)கிராம அபிவிருத்திச் சங்கம், காரைநகர் சிவகௌரி (R.D S) கிராம அபிவிருத்திச் சங்கம், காரைநகர்களபூமி பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்பட்டது (ஐ)

### விநியோகம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 21

கடந்த வருடம் பளைப் பகுதியில் ஏற்பட்ட விவசாயப் பயிர் அழிவுக்கு நிவாரணம் வழங்குவதற்கான படிவங்கள் அந்தந்தப்பகுதி பயிர் செய்கை உத்தியோகத்தர்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. (உ)

### முகாம் அகற்றப்பட்டது

கரவெட்டி, ஆக.21

சாண்டா சந்தைக்கு அண்மையில் அமைந்திருந்த இந்திய அமைதிப்படை முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

அமைதிப்படை முகாமிட்டிருந்த குடியிருப்புக்களில் மீண்டும் மக்கள் குடியேறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (உ-70)

## கடல் மண் அள்ளியவர்கள் மீது மக்கள் ஆவேசம்

### சுருவிலில் சம்பவம்

ஊர்காவற்றுறை, ஆக21

கடற்கரையோரமாக உள்ள மண்ணை அகழ்ந்து எடுத்துச் சென்றவர்களை ஊர்ப் பொது மக்கள் ஒன்றுசேர்ந்து துரத்திய சம்பவம் ஒன்று அண்மையில் சுருவிலில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

வேறொரு கிராமத்திலிருந்து உழவு இயந்திரப்பெட்டியோடு வந்த சிலர் சுருவில் கடற்கரை ஓரமாக இருந்த மண்ணை அகழ்ந்து எடுத்து பெட்டிக்குள் நிறைத்தனர். இதை அவதானித்த சிலர் அவ்வாறு மண் எடுப்பது பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் எனவும் மண்ணை அகழ்ந்தெடுத்தால் ஊருக்குள் கடல் நீர் வர ஏதுவாக அமையும் எனவும் பணிவாகத் தெரிவித்தனராம்.

இதை செவிமடுக்காத அவர்கள் தொடர்ந்தும் மண்ணால் பெட்டியை நிரப்பிக் கொண்டிருந்தனராம். அத்துடன் அங்கிருந்தவர்களை தாக்கவும் முனைந்தனராம்.

இதை அவதானித்த வேறு சிலர் தடிகளுடன் ஓடிவந்தனர்.

உடனே மண் அகழ்ந்தவர்கள் அள்ளிய மண்ணைக் கொட்டிவிட்டு அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-ஐ-16)

### புதிய மின் விஸ்தரிப்புத்திட்டம்

ஊர்காவற்றுறை, ஆக 21

நாரந்தனை பிரதேச சபை உப அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் வரும் பண்ணை வீதியில் இருபத்தையாயிரம் ரூபா செலவில் புதிய மின்விஸ்தரிப்புத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (ஐ-16)

### புதிய படகுச் சேவை

புதிய படகுச்சேவை கடந்த 19ஆம் திகதி முதல் ஊர்காவற்றுறையிலிருந்து காலை 9.15 மணிக்கு அனலைதீவுக்கும், மாலை அனலைதீவிலிருந்து 1.30மணிக்கு ஊர்காவற்றுறைக்கும் இடையில் தினமும் நடைபெறும்.

இச்சேவை மூலம் தபால்கள் காலையிலேயே எழுவைதீவு, அனலைதீவு கட்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-சி-18)

### சோதனைகள் தீவிரம்

சாவகச்சேரி, ஆக. 21

மட்டுவில், கனகன்புளியடிச் சந்தியில் உள்ள அமைதிப்படை முகாம் அதன் சோதனைகளைப் பலப்படுத்தி உள்ளது.

பாதசாரிகளும், வாகனப் பிரயாணிகளும் சோதனை இடப்படுவதுடன்பொதிகளும்பார்வையிடப்படுகின்றன. [ஐ-31]


## PROFESSIONAL COMPUTER STUDIES

1. dBASE III PLUS Classes starting on 24th August at 3 p.m. Fees Rs 2,000/-.
2. WORD PROCESSING Individual Classes starting on any day from 24th August at 3 p.m. Fees Rs.1,500/-.
3. PASCAL and G/W BASIC starting very soon.

Practicals on IBM PC

Contact on week-days only between 2 p m. and 6 p m

R. Karthigesan
C/o. Dr. K. Ramaswamy
Adiyapatham Road,
Thirunelvely East,
JAFFNA. (5825)

## விற்பனைக்கு

32' நீளமுள்ள 3½ தொன் வள்ளம் 41-H.P லிஸ்டர் "எயர் கூல்" இயந்திரம் பூட்டியது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வ நவரத்தினம்
[illegible]
பருத்தித்துறை.
(5876)

## பிரபல மின்தறி நிலையத்திற்கு பெண் நெசவாளர்கள் தேவை

முன் அனுபவம் உள்ளவர்கட்கு தகுதி அடிப்படையில் கூடிய சம்பளம் வழங்கப்படும். புதிதாகப் பயிற்சி பெற்று வேலை செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். உடனடியாக வேலைகள் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: No.332 C/o உதயன், யாழ்ப்பாணம். (5872)

## சீமாட்டி றெக்ஸ்ரைல்ஸ்

ஆதரவில்

**Y. M. H. A**
(Thirunelvely)

நடாத்தும்

## மேசைப்பந்தாட்டப் போட்டி

மேலதிக விபரங்களுக்கு:
Mr. K. RAJAN
"Pathma Giri"
Kondavil East, Kondavil.

Mr. K. S. MUHUNTHAN
Post Box Lane,
Thirunelvely.

(முடிவு திகதி: 28th of August) (5879)

## Sky Rose

No. 1, Hospital Road, Jaffna.

நீங்கள் விரும்பிய
புதிய-பழைய பக்திப் பாடல்களை

இசைத் தட்டுக்கள் மூலம் ஸ்ரீரியோ முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்
மற்றும் இசைத் தட்டுக்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட

* புதிய - பழைய பக்திப் பாடல்கள்
* நகைச்சுவைகள்
* கதை வசனங்கள்
* இந்தி - ஆங்கிலப் பாடல்கள்

ஆகியன பதிவு செய்த கசெட்டுக்களில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

யாழ்நகரில் ஒரே ஸ்தாபனம்.

RECORDING BY EQUALIZER

## ஸ்கைரோஸ்

இல. 1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### எமது புதிய வெளியீடு:

L.P. உன்னால் முடியும் தம்பி
இசை: இளையராஜா

L.P. சோலை குயில்
இசை: முகாரி

L.P. டிஸ்கோ டிஸ்கோ
Bappilahiri & Suresh

L.P. தாயம் ஒண்ணு
இசை: இளையராஜா

L.P. சூரசங்காரம்
இசை: இளையராஜா

E.P. பூ பூத்த நந்தவனம்
இசை: சங்கர் — கணேஷ்

★ றேடியோ, T.V., வீடியோ, மணிக்கூடு மற்றும் எலெக்ரோனிக் பொருட்கள் திருத்திக் கொடுக்கப்படும்.

★ கலர் பிலிம் சுருள் கழுவிக் கொடுக்கப்படும்.

★ Maxell Odio, Video கசெற்றுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூரை முன்னிட்டு நல்லூரில் எமது ஸ்தாபனம் திறக்கப்பட்டுள்ளது.

## ஸ்கைரோஸ் மியுசிக்

131, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C 6302)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு உதவி பெற்று எமது பங்களிப்பை செய்யவேண்டும்

சாவகச்சேரி, ஆக. 21

கஷ்டங்களின் மத்தியிலும் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அகதிகளுக்கு உதவும் பணியை நல்ல முறையில் செய்தது நிச்சயம் பாராட்டப்பட வேண்டியது.

புனர்வாழ்வுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்று எமது பங்களிப்பை நாம் செய்ய வேண்டும். அனைவரதும் முதற்பணி இதுவாக இருக்க வேண்டும். வசதி அற்றவர்களுக்கு உதவி, அவர்களை வாழவைப்பது லயன்ஸ் கழகத்தின் பணியாகும்.

லயன்ஸ் எஸ். விஜயரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக உத்தியோகத்தரின் பதவி ஏற்பு வைபவத்தில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

லயன் வி. பி. இயாகராசா தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அகில இலங்கை ரீதியில் தொழிற்துறைப் பயிற்சியில் முதல் இடத்தைப் பெற்றது குறித்தும் தமது பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார். (இ-31)

சண்டிலிப்பாய்ப் பிரிவில்

## 12,500 குடும்பங்களுக்கு உணவு முத்திரை விநியோகம்

மானிப்பாய், ஆக 21

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குமார் 12,500 குடும்பங்களுக்கான 56,000 இலவச உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக மேற்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கட்டடம் முற்றாக சேதமடைந்திருந்தது. அப்போது சகல உணவு முத்திரை இடாப்புக்களும் காணாமலும், அழிக்கப்பட்டும் போயிருந்தன.

இருப்பினும் உதவி அரசாங்கஅதிபர்செல்வி சாந்தினி சுப்பிரமணியம் தமது உதவியாளர்கள், கிராம சேவகர்கள் ஒத்துழைப்புடன் குறித்த காலத்துள் சகல உணவு முத்திரைகளையும் வழங்கி பொதுமக்களின் பாராட்டை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-90)

## பாதிப்பு

நெடுங்கேணியில் நிலைகொண்டு இருக்கும் அமைதிப்படையினர் திடீர் திடீர் என ஊரடங்குஅமுல்படுத்துவதால் ஏழை விவசாயக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இதனால் ஏழை விவசாயிகள் தமது அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் கஷ்டத்தின் மத்தியில் கழிப்பதாகப் புகார் கூறுகின்றனர். (ஒ-108)


★ கொம்பியூட்டர் பயிற்சி ★

யாழ்நகரிலும்! தெல்லிப்பளையிலும்!

Diploma in Computer Programming in Basic, Advanced Basic & Cobol Courses

2வது புதிய பிரிவுகள் ஆரம்பம்:

22-08-88 (Week day Batch - II)
26-08-88 (Week-end Batch - I)

காலம்: 2 மாதம் ஆரம்ப கட்டணம் Rs. 400/-

Contact:

IDP Institute of Data Processing

342, K.K.S. Road, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம். (12. 30 p.m)

K.K.S, Road, (துர்க்கையம்மன்கோவிலடி) தெல்லிப்பளை. (3. 30 p. m)

(C 6268)



உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 6 ஆம் நாள் (22-08-1988) திங்கட்கிழமை மாலை 4 . 43 முதல் 6 . 07 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
குமாரசாமி
ஜெயக்குமார்
(ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருவளர் செல்வி
குழந்தைவடிவேல்
குமுதினி
அவர்களுக்கும்

வல்வெட்டித்துறை ஆலடி ஒழுங்கையில் உள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திருமதி குமாரசாமியும் குடும்பத்தினரும் வல்வெட்டித்துறை.

திரு. த. குழந்தைவடிவேல் வல்வெட்டித்துறை. (அரசினர் வைத்தியசாலை பருத்தித்துறை)

தனிப்பட்ட அழைப்பு இல்லை.

(5782)


மீன்பிடித் தடையால் கஷ்டமுறும்

# 16,450 மீனவக்குடும்பங்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கம் உதவும்

காங்கேசன்துறை ஆக 21

இரவு நேர மீன்பிடித் தடையால் கஷ்டமுறும் 16,450 மீனவக்குடும்பங்களுக்கு யாழ்- செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பொருட்களை வழங்கவிருக்கிறது.

யாழ்- செஞ்சிலுவைச் சங்கத்தினால் ப. நோ. கூ. சங்கக் கிளை ஊடாக வழங்கப்பட இருக்கும் இலவச உணவு விநியோகம் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

அரிசி, பருப்பு, சீனி ஆகியன அடங்கிய உணவுப் பார்சல் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படும்.

செம்பியன்பற்றுப் பகுதியில் 3,400 குடும்பங்களுக்கும், பருத்தித்துறை பகுதியில் 2,500 குடும்பங்களுக்கும், தொண்டமனாறு பகுதியில் 2,800 குடும்பங்களுக்கும், மயிலிட்டிக் கரை காங்கேசன்துறை பகுதியில் 2,700 குடும்பங்களுக்கும், கீரிமலை, மாதகல் கரைப் பகுதியில் 2,250 குடும்பங்களுக்கும் குருநகர் பகுதியில் 2,800 குடும்பங்களுக்கும்இவ்வுணவுப் பொருள்கள் வழங்கப் படவிருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, உதவி அரசாங்க அதிபர் பிரதிநிதி, பொதுஜன அமைப்புப் பிரதிநிதி ஆகியோர் முன்னிலையில் இப் பொருள் விநியோகம் இடம்பெறும். (ஒ-68)

## உரப்பசளை திட்ட செய்கைத்துண்டம்

மாங்குளம், ஆக 21

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மணவாளன் பட்டமுறிப்புப் பகுதியில் உள்ள தச்சடம்பன் கிராமத்தில் திரு. ம. திருச்செல்வம் என்னும் விவசாயியின் வயலில் உரப்பசளை திட்ட செய்கைத் துண்டம் ஒன்று விவசாயத் திணைக்களத்தால் செய்யப்பட்டது (ஒ- 94)

## வீதி சீரில்லாததால் கோப்பாய்ப் பகுதி விவசாயிகள் அவதி

கோப்பாய், ஆக 21

கோப்பாய் – இராஜ வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

வீதியின் ஓரங்களில் பெரியகுழிகளும், பாதை மேடும், பள்ளமுமாகக் காணப்படுகிறது.

இவ்வீதியினால் தான் விவசாயிகள் பெருங் கஷ்டத்தின் மத்தியில் தமது உற்பத்திப் பொருள்களை திருநெல்வேலி, சுன்னாகம் சந்தைகளுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

பாதை மோசமான நிலையில் காணப்படுவதினால் தோட்டத்திற்குத் தேவையான எரு முதலியவற்றை வாகனங்களில் கொண்டு செல்ல முடியாதுள்ளது.

ஏழை விவசாயிகளின் நன்மை கருதி மிகவிரைவில்இப்பாதையைச்செப்பனிட்டுத்தரும்படிசம்பந்தப்பட்டவர்களிடம் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-72)

கிளிநொச்சியில் அமையவிருக்கும்

## விவசாய பீடத்தின் கட்டட வேலைகள் அடுத்த வருடம் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஆக 21

கிளிநொச்சியில் அமையவிருக்கும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கான, கட்டட வேலைகள் 1989 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சியில் அமைக்கப்பட இருக்கும் விவசாய பீடத்திற்கான நிர்வாக நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக ஒரு குழு அண்மையில் நடைபெற்ற ''செனட்'' கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

விவசாய பீடத்திற்கான பூர்வாங்கச் செலவுகளை மேற்கொள்வதற்காக ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபா ஒதுக்கித் தரும்படி பல்கலைக்கழக நிர்வாகம் உயர் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ஒ-5)

## மானியமாக வழங்க நடவடிக்கை

கிளிநொச்சி ஆக 21

கடந்த 1986, 1985, 1984 ஆகிய ஆண்டுகளில் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட 3 ஏக்கருக்குக் குறைந்த காணியுள்ள ஏழை விவாயிகளுக்கு கடனாக வழங்க இருந்த பணத்தை மானியமாக வழங்க கிளிநொச்சி கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகையா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பயனாக இதற்குரிய விண்ணப்பங்கள் அவ்வப் பகுதி கமநல சேவை நிலையங்களில் வழங்கப்படுகின்றன. (ஒ-76)

லிபரேஷன் ஒபரேஷன் காலங்களில்

## உயிரைப் பணயம் வைத்து சேவையாற்றினர் சங்கத்தினர்

### இயக்குநர் சபை அறிக்கையின் தகவல்

யாழ்ப்பாணம், ஆக21

கடந்த ஆண்டு வடமராட்சி மூன்று லிபரேஷன் ஒப்பறேஷன்களைச் சந்தித்ததை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

இந்தநிலையிலும் எதும சங்கத்தினர் துணிந்து நின்று மக்கள் சேவையே மகத்தான தொண்டு' எனச்செயற்பட்டனர்.

கட்டைவேலி – நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:—

1987 இல் ஆரம்ப காலத்தில் தொண்டமனாறு தொடக்கம் தாளையடி வரையிலான கடற்கரை ஓரப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை உக்கிரமடைந்ததால் கரை ஓர மக்கள் எமது பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். அவர்கள் உணவுக்காக மிகவும் கஷ்டப்பட்டனர்.

இந்தச்சந்தர்ப்பத்தில் சங்கம் இலவசமாக உணவுப் பொருள்களை 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற வாக்குக்கு அமைய வழங்கி வாழ வழி செய்தது.

இந்த நிலையில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை வடமராட்சிமுழுவதும் விஸ்தரிக்கப் பட்டபோது, மக்கள் பெருங் கஷ்டத்தை எதிர்நோக்கினர். சங்கமும் பெரும் பாதிப்படைந்தது.

இந்தச் சமயத்தில் பணியாளர்களும், உயிரைப் பணயம் வைத்து சேவையில் ஈடுபட்டனர்.

இராணுவ நடவடிக்கைகளால் எமது பகுதியில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது உயிரபாயங்களின் மத்தியில் குடாநாட்டுக்கப்பாலிருந்து பலவிதமான பொருட்களையும், ஏற்றிவந்து சங்கத்துக்கு வழங்கிய வியாபாரிகளுக்கும், வாகனச் சொந்தக்காரர்களுக்கும், சங்கத்துடன் தொடர்புகொண்டு சங்கச் செயற்பாடுகளுக்கு உதவி வரும் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (ஐ)

## தொடர் மதிப்பீட்டு முறை மாணவருக்கு அதிகபயன் தருகிறது

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

கரவெட்டி, ஆக. 21

கல்வித் திணைக்களத்தால் அண்மையில் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட தொடர் மதிப்பீட்டு முறைமூலம்மாணவர்கள் அதிக பயன் பெறுவர்.

சி. சி. தமிழ்ப் பாடசாலையில் கொத்தணி அதிபர்களும், வட்டாரக் கல்வி அதிகாரிகளும் கூட்டாக நடத்திய கூட்டம் ஒன்றில் உரையாற்றிய வடமாகாண கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:—

இதுவரை காலமும் நடந்த பரீட்சைமுறை மூன்று தொடக்கம் ஆறு மணித்தியாலங்களுள் ஒரு மாணவனின் ஆற்றலை அளக்கும் ஒரு கருவியாகக் கணிக்கப் பட்டுவந்தது.

இதன்படி குறிப்பிட்ட ஒரு பாடத்தில் தெரிவு செய்யப்பட்ட சில அம்சங்களை ஆயத்தம்செய்து கொண்டுபோகும் மாணவன் அந்த அம்சங்கள் வினாத்தாளில் இடம் பெறுமாயின் மிகத் திறமையுடன் சித்தி அடைவான்.

ஆனால் குறிப்பிட்ட ஒரு பாடத்தில் அம்மாணவன் மிக ஆழமான அறிவைப் பெற்றிருப்பான் என்று கூறமுடியாது.

தொடர்ச்சியாக மூன்றுவருட காலத்துக்கு ஒரு மாணவனின் ஆழ்ந்த அறிவுதொடர்மதிப்பீட்டு அடிப்படையில் பரீட்சிக்கப்படுவதால் அவன் அதிக சிரத்தை எடுப்பதுடன் பாடசாலைக்குக் கிரமமாகவும் செல்வான்.

அத்துடன் ஆசிரியரும் வரையறுக்கப்பட்ட காலத்தில் பாடத்திட்டத்தை முடிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

பரீட்சையை மையமாகக்கொண்டு கற்பிக்கும் முறையை நீக்கி அறிவுக்காகக் கற்பிக்கும் முறையை இப்புதுமுறை ஆதரித்து உற்சாகப் படுத்துகிறது.

இப்படி அவர் கூறினார். (இ-ஐ-70)

## விளாவெளி மயான அவல நிலை நீடிக்கிறது

பண்டத்தரிப்பு ஆக 21

சங்கானை விளாவெளி இந்துமயான மடம் அழிந்த நிலையில் உள்ளது. மயானத்தில் பற்றைகளும் வளர்ந்து மக்கள் தகனக்கிரியைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாத அவல நிலை இருந்து வருகிறது.

சங்கானை, பண்டத்தரிப்பு உள்ளூராட்சிமன்றப் பகுதிகளுக்குப் பொதுவானது இந்த மயானம்.

அழிந்து அரை குறையாக இருக்கும் மடத்தை செப்பனிடவும், பற்றைகளை அழித்து மயானத்தை உரிய வசதிகளுடன் அபிவிருத்தி செய்யவும் அக்கறை எடுக்கப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-120)

## கிளிநொச்சியில் இசைக்கருவிப் பயிற்சி

கிளிநொச்சி 21

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய கட்டடத்தில் கடந்த மாதம் முதல் இசைக்கருவிகளுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறுகிறது.

பிரத்தியேக ஏற்பாட்டில் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் சுமார் 30 பேர் பயிற்சி பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (ஒ-76)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த தின ★ வாழ்த்து ★

## செல்வப் புதல்வி த. நித்தியா



டென்மார்க்கைச் சேர்ந்த தருமராசா புஷ்பமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி நித்தியா இன்று (21-8-88) தனது முதலாவது பிறந்த தினத்தை டென்மார்க்கில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

நித்தியா, அன்பின்செல்வமே உமது அரும் பிறப்பின் முதலாம் ஆண்டு நினைவை எண்ணி உள்ளம் பூரிக்கின்றோம். ஈழத் தமிழ் நாட்டின் மக்கள் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்த வேளையில் உமது அப்பா அம்மா, மாமன்மார், மாமிமார்கள் மனையிழந்து, தொழில் இழந்து, அனாதைகளாக, அயல் நாடடைந்து விட்டனர். நித்தியா, அந்தச் சமயம் நீ உன் தாய் வயிற்றில் இல்லை. ஒன்பது ஆண்டுகளாக உமது பெற்றோர் கண்ணீர்க் கடலில் அலைமோதி டென்மார்க் அகதிகளாகச் சிறைவாசம் செய்தபோது உற்பவித்தீர் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி எம் வயிற்றில் பால் வார்த்தது. நாட்டின் துன்ப இருளில் உமது செய்தி இன்ப ஒளி வீசியது. இன்று உமது சுபதினத்தில் நிகழ்ந்தவை யாவும் மறந்து நெஞ்சின் இனிய நினைவு நிறைவுடன் வாழ்கிறோம் உமது ஆயுள் நீடிய வாழ்வு பெற இறை அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்: அம்மப்பா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், அப்பப்பா, அப்பம்மா, அன்ரிஅம்மா, அயலவர் வாழ்த்துகின்றார்கள்.

**S. Kanapathipillai,**
122/2, Chapel Street,
Jaffna.

(5831)



## St. Patrick's College
Jaffna.

**The School re-opens for 3rd Term as scheduled earlier on 22nd AUGUST 1988. All the students are asked to assemble at the Mathuram Square at 8-00 a.m.**

**- RECTOR**

(C 6281)



J. M. J

# S. P. ANTON

வழங்கும்

## வெளிநாட்டுப்

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ ஜேர்மனி
★ பிரான்ஸ்
★ சுவிஸ்
★ அமெரிக்கா

மேடி நாடுகளுக்குப் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம்.

ஒவ்வொரு வாரமும் எமது சிறு குழுக்கள் இறைவன் நல்லருளுடன் மேடி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு

உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**உங்கள் பயண அமைப்பாளர்:**

## எஸ். பி. அன்ரன்

வேல் ட்றேட் சென்ரர்
இல. 114, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 6280)


அசம்பாவிதங்களின்போது இறந்தவர்களின்

# மரணச்செலவு நிவாரணம் மீண்டும் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக.21

கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த - குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களின் மரணச் செலவிற்கான நிவாரணக் கொடுப்பனவுகள் - மீண்டும்வழங்கப்படவுள்ளன.

யாழ் அரசஅதிபர் திரு எம். பஞ்சலிங்கம் மேற்கொண்ட முயற்சியை அடுத்தே தற்பொழுது மீண்டும் இந்தக் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1987 அக்டோபர் தொடக்கம் 1987 டிசம்பர் வரை இடம்பெற்ற அசம்பாவிதங்களின் பொழுது இறந்தவர்களுக்கு மட்டுமே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இதிலும் இறந்தவர் குறிப்பிட்ட குடும்பத்தின் உழைப்பாளிகளாகவும், அவரதுஉழைப்பில் குடும்பம் தங்கி இருந்தாலும் மட்டுமே இந்த மரணச் செலவு வழங்கப்படும்.

மரணச் செலவாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இந்த நிவாரணப் பணத்தை பெற யாழ். செயலகத்திற்கு விண்ணப்பித்து "வவுச்சரில்" கையெழுத்திட்டவர்கள் இம் மாதம் 25 ஆம் திகதி முதல் யாழ் செயலகத்தில் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளையில் இதுவரை வவுச்சரில் கையெழுத்திடாதவர்களும், விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்களும் மேற்குறிப்பிட்ட நியதிகளுக்கு உட்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில் நாளை 22 ஆம் திகதி முதல் யாழ்- செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (க-9)

### விவாகப்பதிவாளர் நியமிக்க நடவடிக்கை

தீவுப்பகுதிக்கு பொது விவாகப்பதிவாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள் நாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்துடன் யாழ் மாவட்ட மேலதிசபதிவாளர் திரு. எஸ். இராசையா இதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்தார்.

இப்பதிவாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரிகளுக்கான முதலாவது நேர் முகப்பரீட்சை தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. (ஒ-164)

# நியாய விலையில் சிமெந்து விற்பனை

## யாழ்.ப.நோ.கூ.சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஆக 21

யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது வாடிக்கையாளர்களுக்கு சலுகை அடிப்படையில் சிமெந்தை விற்க ஏற்பாடு செய்திருக்கிறது.

ஒரு பக்கெட் சிமெந்தை 100 ரூபா விற்கு விற்க சங்கம் முன்வந்துள்ளதுடன், 50 பக்கட்டிற்கு மேல் சிமெந்து கொள்வனவு செய்பவர்களிற்கு அவர்களது வீடுகளிலேயே அவற்றை விநியோகிக்கவும் முடிவு செய்திருக்கிறது.

இந்த சலுகைத்திட்டம் யாழ். சங்கத்தின் சகல கிளைகளிலும் செயற்படுத்தப்படும்.

இது பற்றி சங்கத்தின் தலைவர் திரு. ஏ. எம். ராஜேந்திரம் மேலும் தகவல் தருகையில்-

சிமெந்தை பதுக்கி வைத்து கள்ளச் சந்தையில் விற்பனை செய்யும் தனிப்பட்ட முதலாளிகளின் நடவடிக்கையை கட்டுப்படுத்தவும், சிமெந்தை மொத்தமாக கொள்வனவு செய்பவர்களின் சிரமத்தைத் தவிர்ப்பதற்காகவுமே இந்தச் சேவையை தாம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார். (உ-க-9)

### வாதரவத்தைக்கு பஸ்சேவை நடத்தக் கோரிக்கை

கோப்பாய், ஆக. 21

கோப்பாய்த் தொகுதியில் மிகவும் பின்னடைந்த நிலையில் காணப்படும் கிராமமான வாதரவத்தைக்கு கோண்டாவில் சாலையினால் நடத்தப்பட்ட வாதரவத்தை- யாழ்ப்பாணம் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கு பஸ்ஓடும் பிரதான வீதிக்கு நீண்டதூரம் நடக்க வேண்டி உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ - 72]

★ யாழ் மாவட்டத்தில்

# நாடு திரும்பிய அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக.21

இந்தியாவில் இருந்து திரும்பிய அகதிகள் தமது பொருளாதார முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக நிவாரண உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான முயற்சிகளை யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக அரச அதிபர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

உதவிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பின் வரும் முறையில் வழங்கப்பட உள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 5,6 ஆம்திகதிகளில் நாடு திரும்பிய அகதிகளுக்கு நாளை 22 ஆம் திகதியும்-

ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி நாடு திரும்பியவர்களுக்கு 23 ஆம் திகதியும் பிரஸ்தாப நிவாரணத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்பட உள்ளன.

இந்த விண்ணபங்கள் மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணிமுதல் 12 மணிவரை மட்டுமே விநியோகிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்களைப்பெற, குடும்பத்தின் பிரதான குடியிருப்பாளர் மட்டுமே வர வேண்டும். அவ்வாறு வரும் போது தமக்கு இலங்கை - இந்திய அரசுகளினால் வழங்கப்பட்டபதிவு அட்டைகளை எடுத்து வர வேண்டும்.

இவ்வாறு பெறப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து கிராம சேவையாளர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் சிபார்சுகளுடன் இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்பிய அகதிகளுக்கான பிரஸ்தாப விண்ணப்பப்படிவ விநியோகம்பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

அகதிகளாக யாழ் மாவட்டத்தில் பதிந்திருப்பவர்கள் மட்டுமே இந்த நிவாரணத்தைப் பெறமுடியும்.

ஏனைய மாவட்டங்களில் பதிந்தவர்களுக்கு இங்கு நிவாரணம் வழங்கப்பட மாட்டாது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க-9)


பிரதி 4·00

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?

பிரதி 4·00

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்


படிப்பை முடித்துக்கொண்டவர்களுக்கு

# கிளிநொச்சியில் முறைசாராக் கற்கை நெறி

கிளிநொச்சி, ஆக 21

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைப் படிப்பை முடித்து விலகியவர்களுக்கான முறைசாராக் கற்கை நெறிகளுக்கான ஆரம்ப விழா நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் கிளிநொச்சி, வவுனியா கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கற்கை நெறிகளை ஆரம்பித்து வைப்பார்.

இவ் வைபவத்தில் கல்வி அதிகாரி திரு. நா. தணிகாசலம்பிள்ளை தொடக்க உரைநிகழ்த்த முறைசாரக் கல்வி வெளிக்கள உத்தியோகத்தர் திரு. செ. சின்னத்துரை சிறப்புரை நிகழ்த்துவார்.

அன்றைய தினம் பேச்சு வழக்கு ஆங்கிலம், ஆடை தயாரித்தல் ஆகியவற்றுக்கான கற்கை நெறிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இதே வேளை மின் இணைப்பு, தளபாடம் தயாரித்தல் போன்ற பயிற்சி நெறிகள் காலக்கிரமத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

சுமார் ஆறுமாத காலம் நடைபெறும் இப் பயிற்சி வகுப்பில் பயிலும் பயிலுனர்களுக்குத் திணைக்கள சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறிகளுக்கு 19 வயது முதல் 25 வயதானவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவர். (ஒ-76)

### இன்று நூல் வெளியீட்டு விழா

காங்கேசன்துறை பகுதி கிராமங்களின் வரலாற்றைக் கொண்ட நூல் ஒன்று இன்று பண்டிதர் சி. அப்புத்துரையால் வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (ஒ-68)

### முறிகண்டியில் கத்திமுனையில் கொள்ளை

புதுக்குடியிருப்பு, ஆக 21

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலடியில் பிரயாணி ஒருவரிடம் பட்டப் பகலில் கத்திமுனையில் பல ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெற்றது. [ஒ-126]

# தமிழக அரசியல் கட்சிகளை உடைக்க பண்ருட்டிக்கு 5 கோடி ரூபா லஞ்சம்!

## இந்திய ராஜ்யசபாவில் குற்றச்சாட்டு

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளை உடைக்க பண்ருட்டி இராமச்சந்திரனுக்கு காங்கிரஸ் கட்சி லஞ்சம் கொடுத்து உள்ளது என்று ராஜ்ய சபாவில் குற்றஞ் சுமத்தப்பட்டது.

தெலுங்கு தேசம் கட்சி எம்பி உபேந்திரா இக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

ஐந்துகோடி ரூபாபேரம் பேசப்பட்டு, அட்வான்ஸாக 50 லட்சம்ரூபா பண்ருட்டிக்குக் கொடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து அமைச்சர் ப. சிதம்பரத்துக்கும் உபேந்திராவுக்கும் இடையே நேரடி மோதல் ஏற்பட்டது.

உபேந்திரா கூறியதாவது:-

தமிழ்நாட்டில் கட்சிகளை உடைப்பதில் காங்கிரஸ் தீவிரமாக ஈடுபட்டு உள்ளது.

அங்கு அ. தி. மு. க. (ஜெ)வை சேர்ந்த பண்ருட்டி ராமச்சந்திரனுக்கு ரூ. 5 கோடி தருவதாக இ. காங்கிரஸ் வாக்குறுதி அளித்து உள்ளது.

இதில் முன்பணமாக அவருக்கு ரூ. 50 லட்சத்தைக் கொடுத்து இருக்கிறது.

### சிதம்பரம்

இவ்வாறு உபேந்திரா குற்றம் சாட்டியதும், மத்திய மந்திரி ப. சிதம்பரம் குறுக்கிட்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

சிதம்பரம் கூறியதாவது:-

உறுப்பினர் உபேந்திரா தாம் கூறிய குற்றச்சாட்டில் உறுதியாக நிற்க வேண்டும். உறுப்பினருக்கு இதுபற்றி எழுத்துமூலம் தெரிவிக்கின்றேன்.

அதன் பிறகு இந்தக் குற்றச்சாட்டு பற்றிய முதல் தகவல் அறிக்கை (எவ். ஐ. ஆர்.) தாக்கல் செய்யப்பட்டு முழுக்க விசாரிக்கப்படும்.

இவ்வாறு சிதம்பரம் கூறினார்.

### நிரூபிக்க வேண்டியது மந்திரி பொறுப்பு

இதைத் தொடர்ந்து உபேந்திரா எனக்குக் கிடைத்த தகவலை உங்களுக்குத் தெரிவித்து விட்டேன். இனி அதுபற்றி விசாரணை நடத்தி, அப்படி நடக்கவில்லை என்று நிரூபிக்க வேண்டியது உங்களைச் சேர்ந்தது என்று கூறினார்.

### பரபரப்பு

உபேந்திராவின் இந்தக் குற்றச்சாட்டு சபையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தொடர்ந்து உபேந்திரா மேலும் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் தேர்தலை நடத்தாமல், ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பது தமிழக மக்களின் விருப்பத்துக்கு எதிரான ஜனநாயக விரோதச் செயலாகும்.

இதே மாநிலத்தில் ஆட்சி நடத்தும் இ. காங்கிரஸின் சர்வாதிகாரப் போக்கையே காட்டுகிறது.

### துரோகம்

நாட்டிலேயே உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது எம். ஜி. ஆர். இறந்த பிறகு அவருக்கு வழங்கப்பட்டது. அதே சமயம் அவரது விதவை மனைவிக்கு மத்திய அரசு துரோகம் இழைத்தது.

இப்போது எம். ஜி. ஆர். ஆட்சி வரலாற்றில் இருண்ட காலம் என்று இ. காங்கிரஸார் கூறுகிறார்கள். ஆனால் முன்பு அவரைப் பாராட்டி வந்தனர்.

### ஏமாற்றுவேலை

ஜனாதிபதி ஆட்சிநீடிப்பதற்கு வன்னியர் போராட்டம், ஆசிரியர்- அரசு ஊழியர் போராட்டம் ஆகியவை காரணங்களாகக் காட்டப்படுகின்றன.

இது பொய்யான வாதம். அத்துடன் ஏமாற்றுவேலை.

இவ்வாறு உபேந்திரா பேசினார்.

(எ - 4)


# பல்கலைக்கழக விரிவுரைகள் (வெளிவாரி)

## கல்வியாண்டு 1989/90

**இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப்பாட நெறிகளான**

★ கலைமாணி **B.A**
★ விஞ்ஞானமாணி **B.Sc.** (புள்ளிவிபரவியல்)
★ வணிகமாணி **B.Com.**

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.

இவ் வருடம் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 1-10-1988**

**விரிவுரைகள் 2-10-1988 இல் ஆரம்பமாகின்றன.**

உதவிப் பதிவாளர்

## பட்டப் படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ விரிவுரைகள் யாவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வழங்கப்படும்.
★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்.
★ கடந்த வருடம் சித்தியடைந்த மாணவர்களில் 99% எமது கல்லூரி மாணவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C 6259)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான பணி முன்பயிற்சி:

## தொழில்சார் அறிவும் திறனும் பெற உதவும்

அரம்ப ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி கடந்த வியாழக்கிழமை அரம்பமாகி தற்போது நடைபெற்று வருகிறது. அதனை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

"ஆற்றல் வாய்ந்த ஒருவன் ஒரு வேலையைச் செய்கின்றான் ஆற்றல் அற்றவன் கற்பிக்கின்றான்" என்னும் பெர்னட்ஷாவின் கூற்று இன்று முற்றிலும் பிழைத்து விட்டது.

"ஆசிரியர் எக்காலத்திலும் செயலாற்றுபவர்; அவருடைய செல்வாக்கு எங்கு முடிவடைகின்றது என்றும் எவராலும் கூற இயலாது" எனஹென்றி ஆடம்ஸ் கூறியது ஈண்டு நோக்க வேண்டியது.

மேலும் இந்தியாவில் டி. எஸ். கோத்தாரி தலைமையில் 1964 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய கல்விக் குழு தனது அறிக்கையின் தொடக்கத்தில் "இந்தியாவின் வருங்காலம் தற்போது இந்தியாவின் வகுப்பறைகளில் உருவாக்கப்படுகின்றது" என்று குறிப்பிட்டுள்ளது.

இக்கூற்றும் ஆசிரியரின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது. இத்தகைய மகத்தான பணியைச் செய்யும் ஆசிரியர் தம் தொழில் சார்ந்த அறிவும், அனுபவமும், திறனும், பயிற்சியும் பெற்றிருத்தல் மிகவும் அவசியமாகும்.

இலங்கையில் பொதுக் கல்வித் தகைமையுடன் அல்லது பல்கலைக்கழகப் பட்டத்துடன் ஆசிரிய நியமனங்கள் வழங்கும்

### ஓடுகின்ற நீரோடையாக விளங்க கருத்துப் பரிமாற்றம் அவசியம்

முறை நீண்டகாலமாக நடைமுறையிலிருந்து வருகிறது.

#### குறைபாடாக இருந்தது

இவர்களுக்கான தொழில்சார் பயிற்சி ஆசிரியப் பணியைத் தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்படாதது பெரும் குறைபாடாக இருந்து வந்தது.

சிலர் எவ்விததொழில்சார் பயிற்சியுமின்றியே இப் பணியைத் தொடர்ந்தும் ஆற்றிவருகின்றனர். பலர் நீண்டகால ஆசிரியப் பணியின் பின்னரே இவ்வித பயிற்சியைப் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆசிரியர்விருத்தி தொடர்பான இந்த அம்சம் கவனிக்கப்படாதது. எமது நாட்டின் கல்வி முறையிலுள்ள பெருங் குறைபாடாகும். ஆசிரியர் பள்ளிகளில் தம் பணியை ஆற்றத் தொடங்கும்போது கல்வியியல் தொடர்பான பல்வேறு விடயங்களை அறிந்திருத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

கல்விமுறைகள், கல்வியின் நோக்கங்கள், பள்ளிக்கூட அமைப்புமுறைகள், கலைத்திட்ட அடக்கங்கள், கற்பிக்கும்முறைகள் - நுட்பங்கள், பள்ளிக்கூட - சமுதாய தொடர்புகள், கல்வி முகாமைத்துவ முறை, தேர்தல் முறைகள் போன்ற பல்வேறு விடயங்களிலும் அறிவும் ஆற்றலும் பெற்றிருத்தல் இவர்தம் பணிக்கு மிகவும் வேண்டியதாகும்.

#### சகலருக்கும் அவசியம்

ஆசிரியர் பணியானது தமது பாடப்பொருளை மாணவருக்கு ஒப்படைப்பதுடன் மாத்திரம் நிறைவு பெறுவதில்லை. மாணவரின் கற்றல் நடவடிக்கைகளைத் தூண்டுவதும், சமுதாய விருத்தித் தேவைகளில் தம்மை ஈடுபடுத்துவதும் ஆசிரியரின் முக்கிய பணிக்கூறுகளாகும்.

பள்ளிக்கூடமென்பது 'புதுமைகாண் உயிர்ப்பு அமைப்பு' என்ற உணர்வு ஆசிரியர்களுக்கு அவசியமானது.

இவ்வித தொழில்சார் பயிற்சியும், தேர்ச்சியும் தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குமாத்திரமன்றிப் பல்கலைக்கழகம் போன்றமேல்நிலைக் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் அவசியமானது என்ற கருத்தைப் பல கல்வியியலாளர்கள் முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் ஆசிரியர்களுக்கான பணி முன் பயிற்சிமுறை அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

கல்வி முறையில் சமீப காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட புதிய அணுகுமுறைகளில் இது மிகவும் முக்கியமானது. புதிதாக நியமனம் பெறும் ஒவ்வோர் ஆசிரியனும் தனது தொழில்சார் அறிவை ஓரளவாவது பெற்றே தன் கற்பித்தல் பணியைத் தொடங்க வேண்டும் என்ற நோக்குடனேயே இப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இது இலங்கைக்கான வெளிநாட்டுக் கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெறுவது குறிப்பிடத் தக்கது.

#### பயிற்சி முறை

இப்பயிற்சித்திட்டத்தின் கீழ் புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர் மூன்றுவார காலம் வதிவிட வசதியுடன் செறிவான முறையில் பயிற்சியைப் பெறுவர். இவர்களுக்கான பயிற்சிநிகழ்ச்சிகள் அதிகாலையில் ஆரம்பித்து இரவு வரை நீடிக்கும் காலையில் உடற்பயிற்சி. முற்பகலில் தொழில்சார், பொது கல்விசார் அறிவுபெறல். மாலையில் விளையாட்டுக்கள்; இரவில் நுண்கலை நிகழ்ச்சிகள் என்ற அடிப்படையில் இவர்களுக்கான பயிற்சித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மேலும் விளையாட்டுப் போட்டி, நாடகம், கல்வி வெளிச்செலவு, விவாதம் பட்டிமன்றம், வேலை அனுபவம் போன்ற ஆசிரியரின் விருத்திக்கு உதவக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளும் உள்ளடங்க இப்பயிற்சி முறை இடமளிக்கின்றது.

பல்வேறு செயலமர்வுகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்ட ஓர் ஆசிரியச் செயற்பண்ணை போன்று இப் பணிமுன் பயிற்சிக் களம் அமைவது குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சின் பணி முன் பயிற்சிப் பிரிவே இப்பயிற்சித்திட்டத்திற்கும் பொறுப்பானது. ஆசிரிய நியமனங்களை அடுத்து காலத்திற்குக் காலம் நாட்டின்பல்வேறு [illegible] சித்திட்டம் ஒழுங்குசெய் [illegible] ஆசிரிய கல்லூரிகளின் விரிவுரையாளர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான நிகழ்ச்சித் திட்டமே இப்பயிற்சிக் காலத்தில் பின்பற்றப் படுகின்றது.

கல்வி அமைச்சின்பணி முன் பயிற்சிப் பிரிவு ஆசிரியகல்லூரிகளிலிருந்து விரிவுரையாளர்களைப் பெற்றே இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது.

ஆசிரியரைப் பயிற்றுவித்தல் தொடர்பான அறிவினையும் ஆற்றலையும் கொண்ட விரிவுரையாளர்கள் இப்பயிற்சியை நெறிப்படுத்தி செயற்படுத்துவதில் முன்னின்றுபணிபுரிகின்றனர்.

வழமையான விரிவுரை முறைக்குப் பதிலாக மாணவரின் கற்றல் நடவடிக்கைகளைத் தூண்டவல்ல உத்திகள் பல கையாளப்படுதல் இப் பயிற்சி முறையின் சிறப்பான அம்சமாகும். மேலும் குழுத் தொழிற்பாடுகள் பலவும் இதில் ஊக்குவிக்கப்படுகின்றது.

புதிதாக நியமனம் பெறும் எல்லாவகை ஆசிரியர்களுக்கும்பொதுவானதொரு பயிற்சித் திட்டம் பின்பற்றப் பட்டாலும், நியமனம் பெறும் ஆசிரியரின் பாடப்புலத் தன்மையையொட்டியும், பணிபுரியவுள்ள பிரதேசங்களின் சமூகப் பண்புகளையொட்டியும் இப்பயிற்சி முறை அமைதல் அவசியமாகிறது.

இதன் அடிப்படையிலேயே பயிற்சிஆரம்பிக்கு முன்னர் பயிற்சி அளிப்போர் செயலமர்வுகளில் ஈடுபட்டு பயிற்சித்திட்டத்தில் வேண்டிய மாற்றங்கள் செய்வதும், விளக்கங்கள் பெறுவதும் ஒரு முக்கிய மரபாகவுள்ளது.

ஆசிரியருக்கான இப் பணி முன் பயிற்சி நன்கு திட்டமிடப்பட்டு வேண்டிய கல்விவளங்களுடன் நடைமுறைப்படுத்தப் படுமானல் ஆசிரியர் தமதுபணி தொடர்பான விளக்கங்களையும், வினைத் திறனையும் பெறுவதுடன் தொடர்ந்து தம் பணிக் காலத்தில்பெறவிருக்கும் நிறுவனப் பயிற்சியாலும் பணிவிடைப் பயிற்சிகளாலும் நன்மை பெறுவர்.

#### நியூட்டன் பேக்கர் கருத்து

"ஒருவன் இன்று பட்டம் பெற்று. மறுநாள் கற்றலை நிறுத்தி விட்டால் அதற்கடுத்தநாள் அவன் கல்லாதவனுகி விடுகிறுன்" என்றுநியூட்டன் பேக்கர் என்பவர் குறிப்பிட்டுள்ளதை ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் ஓடுகின்ற நீரோடையாக விளங்க வேண்டுமே தவிர தேங்கிய நீராக இருத்தல் கூடாது. ஆசிரியர்களும் கல்விப்பணியில்ஈடுபட்டுள்ள ஏனையோரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன் வாயிலாகத் தான் ஆசிரியர் விருத்தி ஏற்பட முடியும்.

இவ்வித அனுபவங்கள் பலவற்றை ஆசிரியர் பணிமுன் பயிற்சி மூலம் பெற வேண்டும். ★

**செ. நல்லையா எம். ஏ (கல்வியியல்)**

## அளவை நன்னகரில் அற்புதக் கோயில்



### அளவெட்டி
# ஸ்ரீ நாகேஸ்வரம்

சிவமும் சக்தியும் பரம் பொருள் கண்ணனும் அம்மை பெற்ற தொப்பை அப்பனும் சிவன் பொறி அதனுள் தோன்றிய முருகனும் காவல் தெய்வமாம் வைரவமூர்த்தியும் ஒருங்கே அமர்ந்த திருத்தலமாம் அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரத்தில் ஆவணி மாதம் 9ஆம்(25-08-88) திகதி வியாழக்கிழமை கொடியேற்ற வைபவம் நடைபெறுவதையொட்டி ஷ ஆலய வரலாறு இங்கு பிரசுரமாகின்றது.

குறுமுனி ஒருவரின் அயராமுயற்சியால் தினம் தோறும் புதுமை பெற்றுவரும் இத்தல மகிமையை சொல்லில் வடித்தல் அரிதாகும். இறந்த பாலன் உயிர் பெற்றமை, மலடு நீங்கி சந்தானம் பெற்றமை, இழந்த கண்ணொளியை மீண்டும் பெற்றமை, ஊமையை பேச வைத்தமை போன்ற அற்புதங்கள் பல செய்து தான் தோன்றிய கடம்ப மர நிழலில் ஆலயம் அமைப்பித்து அங்கு இருந்து ஆட்சி செய்து அருள் பாலிக்கின்ற கிருஷ்ணபகவான் ஆவணிமாத ரோகிணி நட்சத்திரத்தில் அட்டமித்திதியில் அவதரித்தவர். சிவமும் தாமும் ஒன்றே என்று இத்திருத்தலத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்ற காட்சியைக் காண ஆயிரம் கண்களும் போதா! நாள் தோறும் கூடும் அடியவர்க்கு பூமாதும் புவிமாதும் புடைசூழ அவர்காட்டும் காட்சி கண்டவர் மனங்களை உருகவைப்பதாகும். மனிதரோடு மனிதராகத் தோன்றி யுகங்கள் தோறும் அழகுக் கோலம் காட்டி அருள்புரிந்த மாதவன் இங்கு ஸ்ரீரங்கக் காட்சி தருகின்றான். நாள் தோறும் தன்னடிக்கு வரும் அடியவர்கள் குறைபோக்க குறுமுனிக்கு ஒளி கொடுத்து அடியவர் தம் பிணி போக்கும் அற்புத நிகழ்ச்சிகளைக் கண்டவர் பரவசமடைவர். அண்மையில் புதிய ஸ்தூபியுடன் கும்பாபிஷேகம் கண்ட கண்ணன் ஆடும் நாகபடத்தின் கீழும் தங்கத் தேரிலும் ஏறிவரும் காட்சியை அடியவர்கள் மஹோற்சவ காலங்களில் கண்டு இஷ்டசித்திகளும் பெற்றேகுவார்களாக.

(C/5311)

### துர்க்கை அம்மன் ஆலயத்தில்

சாவகச்சேரி, ஆக.21

சாவகச்சேரி துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் ஆடிப்பூரத்தன்று பகல் 108 சங்காபிஷேகம் பூஜை ஆகியவையும் மாலை வசந்தமண்டப பூஜை அம்பாள் வீதி உலா ஆகியவை இடம் பெற்றன. சிறப்பு நிகழ்ச்சி [illegible] பெற்ற திருவிளக்குப் பூஜையில் சுமார் 200 பெண்கள் கலந்துகொண்டனர்.

சிவாகமஞானசாகரம் சிவஸ்ரீ. க. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இவை நடைபெற்றன.

(இ -31)

# அன்னமிடும் செல்வன்
# செல்வச் சந்நிதிக் கந்தன்

ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ள செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்மிகவும் பழமையும், புனிதமும் வாய்ந்தது. செல்வச்சந்நிதி முருகனை, அடியார்கள் கல்லோடைக் கந்தன், அன்னமலையான், அருதைகளுக்கு அன்னமிடும் செல்வன், காவடிக்கந்தன், தீராத பாப வினை தீர்க்கும் வைத்திய



நாதன், ஆற்றங்கரையான் என்றெல்லாம் அழைப்பர்.

செல்வச்சந்நிதி முருகனின் ஆலயத்தில் சென்ற இரண்டு ஆண்டுகளாக நித்திய பூசைகள், திருவிழாக்கள் தடைப்பட்டிருந்தன. முருகப் பெருமான் கலியுகக் கடவுள். அவரை வழிபடுவதால் நமது பிறவிப் பிணி தீர்ந்து நாம் இன்பமடையலாம்.

அதனுல் முருக பக்தர்கள் பலரும், அனலிடை மெழுகு போல் உருகிப் பரம கருணைநிதியே, உனக்குப் பூசை, திருவிழா நடைபெற வேண்டும். நீ வீதி உலாவரும் ஆனந்தக் காட்சியை எம் கண் குளிரக்காண வேண்டும் என்று இரந்து வேண்டினர். வேண்டுவார் வேண்டுவதை மனங்குளிரக் கொடுத்தருளும் வெற்றிவேவாயுதப்பெருமானின் பெருங்கருணையினுல் சேதமுற்ற ஆலயம் மீண்டும்புனருத்தாரணம் செய்யப்பட்டு சென்ற மார்ச் மாதம் மஹாகும்பாபிஷேகமும், அதைத் தொடர்ந்து 40 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்று கடைசி நாளன்று அன்னக்கந்தன் வீதி உலா வந்து அடியார்களை ஆசீர்வதித்தருளினுர்.

செல்வச்சந்நிதி முருகன், ஆலயத்திற்கு இது புதிய தேர் அனுபவமல்ல கி. பி 1505 தொடக்கம் 1658 வரை போர்த்துக்கீசர் இலங்கையை ஆட்சிபுரிந்த காலத்திலேயே, இவ்வாலயம் இருந்திருக்கிறது. 1658, தொடக்கம் ஒல்லாந்தர் ஆட்சி நிழும் போது. ஒல்லாந்தரால் இவ்வாலயம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. கி. பி 1796 தொடக்கம் பிரித்தானியர் ஆட்சி நிகழும்போது முன்னர் ஆலயம் இருந்த இடத்தில் மீண்டும் அமைக்கப்பட்டது.

#### உற்சவகாலம்

இவ்வருடம் மகோற்வம் 12-8-88 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 21 ஆம் திகதிகாலை பத்து மணிக்குப் பூங்காவனமும் 25 இல் சப்பரத் திருவிழாவும்

> சரித்திரப் பிரசித்தி வாய்ந்த தொண்டமானுறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று பூங்காவனத் திருவிழாவாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

26 இல் தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும், அன்று மாலை மௌனத் திருவிழாவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

#### அடியார் மடம்

செல்வச்சந்நிதியில் முக்கிய அம்சமாக விளங்குவது, அன்ன தானத் திருமடங்களாகும். இம் மடங்களெல்லாம் சேதமுற்ற நிலையிலுள்ளன. அடியார் மடம் மாத்திரம் சில ஓடுகள் உடைந்ததைத் தவிர வேறு சேதம் இல்லை. சில பொருள்கள் களவாடப்பட்டிருந்ததெனினும், அப்பொருள்களை அன்பர்கள் பலரும் வாங்கிக் கொடுத்துள்ளனர். ஆலய மஹா கும்பாபிஷேக மண்டலாபிஷேக நாட்களில் பகல் 12மணிக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த மடம் முருகப் பெருமானின் ஆலய முனபாக, நேர்கிழக்கே சிறிது தூரத்தில் இருக்கின்றது. மடத்துக்கு முன்பாகக் கிணறு ஒன்று உண்டு. மடத்தின் முழுப் பொறுப்பையும் ஒய்வு பெற்ற ஆசிரியர் திரு. ம. வெங்கடாசலபிள்ளை அவர்களே ஏற்று நடத்தி வருகிறுர்.

உற்சவ காலத்தில் தினமும் பகல் 12மணிக்குச் சிவபுராணம் ஓதி அன்னதானம் வழங்கப்படும். விரும்பும் அன்பர்கள் அரிசி, காய்கறி வகைகள், தேங்காய், விறகு, வாழை இலை முதலிய பொருட்களோ, பணமோ நேரில் கொடுத்தாலும், அனுப்பிவைத்தாலும் அதை ஏற்று, வழங்கும் அன்னதானத்தோடு சேர்த்து வழங்கப்படுவது வழக்கம். ★

**கே. கே. கிருஷ்ணபிள்ளை**

### பொது அறிவுப் போட்டி இல; 10

சரியான விடைகள் வருமாறு;

(1) கடமை
(2) சாஸ்திரி
(3) ஆத்மபலம்
(4) மல்லிகை
(5) முதலை
(6) அணை
(7) பத்திரிகை
(8) ஊக்கம்
(9) சிதை
(10) மனம்
(11) நூல்
(12) சத்துணவு

ஒருவரே சரியான விடையை அனுப்பி இருந்தார். அவருக்கு முதலாவது பரிசு வழங்கப்படுகிறது.

1. செல்வி ஆசாமேதர், 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சித்திரத் தேர்

சாவகச்சேரி, ஆக 21

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவிலில் புதியசித்திரத் தேர் ஒன்று அமைக்க ஏற்பாடாகி இருக்கிறது.

இச் சித்திரத் தேருக்கான அச்சேற்று வைபவம் இம் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11-30 முதல்12-05 வரையுள்ள சுப வேளையில் நடைபெறும்.

மட்டுவிலைச் சேர்ந்த திரு. கி. கலாமோகன் சித்திரத்தேர் சிற்ப நிர்மாணப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

(இ-31)

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை ரூபா 68/55 125 கிறும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவைக்கால முன்பயிற்சி யாழ் நகரில் நடப்பது வரவேற்கத்தக்கது

## கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஆக. 21

ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன் பயிற்சிகள் இதுவரை காலமும் தென்பகுதியிலேயே நடைபெற்று வந்தன. முதல் முறையாக இது யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது வரவேற்கக் கூடியது.

ஆனாலும் இவ்வாறான பயிற்சிகளை யாழ். நகரில் நடத்த வசதியான பாடசாலைகள் பற்றாக்குறையாக இருந்த போது குறிப்பிட்ட மூன்று தனியார் பாடசாலைகள் எமக்கு உதவ முன்வந்தது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன் பயிற்சியைத் தொடக்கி வைத்த யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தமதுரையில் தெரிவித்தார்.

பிரஸ்தாப பயிற்சி யாழ். நகரில் உள்ள ஏழு பாடசாலைகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பயிற்சியை ஆரம்பித்து வைத்த பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தமதுரையில் கூறியதாவது;-

ஆசிரியர்கள் பொதுவாக ஒழுக்கத்தையும், நமது கலாசாரத்தையும் பேணுபவர்களாக இருக்க வேண்டும். அதிலும் இந்த ஆரம்ப ஆசிரியர்கள் மாணவர்களின் ஆரம்பக் கல்வியைப் புகட்டுபவர்களாக இருக்கப்போகிறார்கள்.

எனவே வருங்கால ஆசிரியர்களாகிய நீங்கள் ஒழுக்கத்தையும், பண்பையும், கலாசாரத்தையும் மிகக் கவனத்துடன் பேணவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மன்பு அறிவிக்கப்பட்டபடி ஏனைய பாடசாலைகளின் பயிற்சிகளை கல்வித்திணைக்கள அதிகாரிகளான திருவாளர்கள் கே. கந்தசாமி, சி. புலேந்திரன், ச. தனஞ்செயன், சி. சிவானந்தம், ஆ. வ. தங்கராஜா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். [ஒ-9]

## தெற்கில் ஐவர் பலி!

கொழும்பு, ஆக. 21

தென் இலங்கையில் கடந்த வியாழக்கிழமை 5 பேர் உயிரிழந்தனர்.

மொனருகலையில் 2 ஊர்காவல் படையினரும்—

மாத்தறையில் மூன்று யு.என்.பி. ஆதரவாளர்களும் ஜே. வி. பி யினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

## றே. கத்தோலிக்க கற்கை நெறி பெறுபேறுகள்

1982, 1983ஆம் ஆண்டு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் றோமன் கத்தோலிக்க கற்கைநெறிப்பாடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கான பெறுபேறுகள் பலாலி கலாசாலைக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சான்றிதழ்களை பலாலி ஆசிரிய கலாசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## மக்கள் குடிபெயர்வு

நெடுங்கேணி பட்டிக் குடியிருப்புகிராமத்திற்கு அண்மையில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் இனந்தெரியாத நபர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் எதிரொலியாக அப்பகுதி ஏழை விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் குடிபெயர்ந்து அயல் கிராமம் ஒலுமடு, நெடுங்கேணி பகுதிகளுக்குக்குடிபெயர்ந்துள்ளனர் இரவில் பெரும் பான்மை இனத்தவர்களால் ஆபத்து வரலாம் என்றபதற்றமான நிலை அங்கு நிலவுகிறது. (ஒ- 108)

# தமிழர் சித்திரவதை குறித்து சர்வதேச மனித உரிமைச் சங்கம் புகார்

புதுடில்லி, ஆக.20

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் காவலில் இருந்த 6பேர் காணாமலோ அல்லதுமடிந்தோ போயிருப்பதாகவும் 3 பேர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய அரசுக்கு சர்வதேச மனித உரிமைச்சங்கம் (ஆம்னஸ்டி இன்டர் நேசனல்) ஜூன் மாதம் அளித்த அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் படித்து வந்தபரமானந்தன் (வயது 19) 1987 நவம்பர் 16ஆம் திகதி அந்தப்பகுதியைச் சேர்ந்த 6 தமிழ் இளைஞர்களுடன் கைதுசெய்யப்பட்டார். அவர்களின் கண்களைக் கட்டி இந்தியப்படை பிடித்துச் சென்றதாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

பரமானந்தன் தலை கீழாகத் தொங்க விடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகவும் சிகரெட் நெருப்பினால் சுடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இரண்டு நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டதாக மேற்கண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது மரணம் குறித்து குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்படவில்லை. டிசம்பர் இறுதியில்தான் அவர் இறந்துவிட்ட செய்தி அதிகார பூர்வமற்ற முறையில் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

காவலில் உயிரிழந்த மற்றொரு மாணவரின் பெயர் யசோதரன் தங்கராசா (வயது 17). இவரை 1987ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி இந்தியப் படை பிடித்துச் சென்றது. அவரது கதிபற்றி 1988 ஏப்ரல்வரை அவரது குடும்பத்தினருக்குத் தெரியவில்லை. அவர் இறந்திருக்கலாமென அவர்கள் அஞ்சுகிறார்கள்.

உடுவில் கிராமசபையின் காவலாளியான கனகலிங்கம் நாதன் (வயது 35) என்பவரின் சடலத்தை அவரது குடும்பத்தினரிடம்அமைதிப்படை ஒப்படைத்த போது அவரது உடலில் காயங்களும் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்களும் காணப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் வாக்குமூலம் அளித்ததாக அது தெரிவித்துள்ளது.

மிகக் கொடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்ட 3 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களைத் தெரிவிக்க விரும்பவில்லை என்றும் அது கூறியுள்ளது. (ஒ-4)

# நயினாதீவில் கடற்படையினர் கெடுபிடி

யாழ்ப்பாணம், ஆக. 21

அண்மைய காலங்களில் நயினாதீவு ஸ்ரீலங்கா கடற்படையினர் அவ்வழியூடாக பயணம் செய்யும் படகு சொந்தக்காரர்களையும், பயணிகளையும் பலத்த கெடுபிடிகளுக்கு உள்ளாக்கி வருகின்றனராம்.

சோதனைகளைத் தீவிரப்படுத்தி அடையாளக் கார்ட்இல்லாதசிலரைத் தாக்குவதுடன், பிரயாணிகள் கொண்டு செல்லும் பொருட்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியையும் தமக்கென எடுத்துக் கொள்கின்றனராம்.

பழங்கள், சிற்றுண்டிகள், வியாபாரிகள் கொண்டு செல்லும் வியாபாரத்திற்கான உணவுப் பொருட்கள் என்பனவே இவ்வாறு பறிக்கப்படுகின்றனவாம்.

அத்துடன் சோதனையின் போது மிரட்டுதல், போன்ற கடும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனராம்.

அதேவேளை குறிகாட்டுவான் நயினாதீவு சேவையிலீடுபடும் படகுகளின் உரிமையாளர்களிடம் ஒவ்வொரு முறை சோதனைக்காகவும் படகுகள் வரும் போது கற்கள், சீமெந்து என்பவற்றை எடுத்து வந்துஇறுமாகத் தமக்கு தரும்படி உத்தரவிட்டுள்ளனர்.

சோதனைமுகாமிலுள்ள இறங்குதுறையைக் கட்டுவதற்காகவே இந்தப் பொருட்களை கொண்டு வந்து தரும்படி கூறப்பட்டுள்ளதாம்.

இவ்வாறு செய்யாத பலர் பல தடவைகள் மிரட்டப்பட்டுள்ளனராம்.

இதனை அடுத்து தற்பொழுது பிரஸ்தாப சேவையில் ஈடுபடும் படகுகள் கல், சீமெந்து ஆகியவற்றைத் தினமும் எடுத்துச் சென்று வழங்கி வருகின்றன. (ஒ-9)

## கொழும்பின் பாதுகாப்பு சுசிலிடம்

கொழும்பு, ஆக 21

கொழும்பு மாநகரின் பாதுகாப்புப் பொறுப்பு மேற்கு மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்காவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

இதுவரை காலமும் போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகமது அதைக் கவனித்து வந்தார்.

கொழும்பு மாநகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கும்படி திரு. சுசில் முனசிங்காவை ஜனாதிபதி பணித்திருக்கிறார். (ஒ-எ)

## சனசமூக நிலையத்துக்குக் காணி அன்பளிப்பு

சுன்னாகம், ஆக 21

உடுவில் கற்பக்கணை கலைமதி சனசமூக நிலையத்துக்குப் பல ஆயிரக்கணக்கான ரூபாபெறுமதி வாய்ந்த காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நிலையத்தின் சிறப்பாலோசகர் திரு. க. உமாபதியும், உடுவில் முருகமூர்த்திவித்தியாலய அதிபர் திரு. வை யோகீஸ்வரனும் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதிமிக்க காணிகளை நிலையத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இக்காணிகளில் புதிய கட்டடம் ஒன்றை நிறுவும் பணியில் சனசமூக நிலைய நிர்வாகிகள் முயற்சி எடுத்துள்ளனர். (ஒ-27)



## 6ஆம் மாத நினைவஞ்சலி

மண்ணுலகில்:
31 - 12 - 1960

விண்ணுலகில்:
21 - 03 - 1988

திருமணம்:
20 - 01 - 1988

அமரர் திருமதி
உமாபதி விக்னேஸ்வரமூர்த்தி
உமா - தவம், நாவற்குழி

சிரிக்கும் பொற்சித்திரமாய்
சிந்தை மகிழ் கற்பனையாய்
வண்டனைய கருவிழியும்
வாடாதமலர்ச்சிரிப்பும்
இனிமையெலாம் ஒருருவாய்
இன்சொல்லும் மதிமுகமும்
கொண்டவளே உமாவென்னும்
பொற்கொடியே கற்பகமே
வேண்டுவார் வேண்டுவென
உதவுமொரு பொற்பாவையாய்
நாவற்கழியூர் நன்கறிந்த
நற்றவமே! நிறைதடமே!
சின்னஞ்சிறு வயதிற்
புழ் பூக்க வாழ்ந்ததுவும்
மணக்கோலத்தொடு சில நாள்
மகிழ்ந்ததுவும் இவையெல்லாம்
பொன்னுலக மாளுமொரு
மனக்கருத்தால் விளைந்தனவோ!!
என்றெண்ணி ஒவ்வோரும்
ஏங்கியழுத கண்ணீருனைக்
கரைகடந்த பன்னீராய்க்
கழுவியதை அறியாயோ?
நெஞ்சத்தை நீராக்கி
நெக்குருகி அன்புமலர்
சூட்டுதலே எம்செயலாம்;
ஏழேழு சென்மங்கள் எடுத்தாலும்
நின்நினைவு அழகுச்சிலையாகி அழிவின்றி
எம்நெஞ்சத்தை உயிர் நிலையாய்
உணர்வளிக்கும் உமாதேவி
எந்தன் கற்பனை எத்தனை எண்ணங்கள்!
நீர் மட்டுமல்ல
நாங்களும் கொண்டிருந்தோம்
ஒவ்வோருடனும்
இனிமையாய்ப் பழகும் அன்பில்
மற்றையோர்க்கு உதவி
செய்யும் பண்பில் உம்மை
யாவருமே மெச்சிநின்ற
வேளையில் காலன் அரக்க
உருவில் கவர்ந்தானு
எண்ணத்திற்கெட்டா பெருவாழ்வே!
உம்மை எங்கெல்லாம்
சென்று நாம் தேடுவதோ?
அமரத்துவம் பெற்றுவிட்ட உமாவே;
உம் பிரிவால் வாடுகின்றோம்.

அம்மா, அண்ணன், மகேஸ் (சவூதி அரேபியா)
மாமன்மார், மாமிமார், மச்சான்மார்,
மச்சாள்மார், தவம்,
உற்றார், உறவினர்கள்.

(5867)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தம்பையா கனகேந்திரராஜா

தோற்றம்: 1952 - 2 - 29  மறைவு: 1986

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடராய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் அன்பிற்கு இலக்கணமாய் இருந்து நினையாத நேரமுமில்லை எமக்கே. எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ற பாசமிகு தெய்வமே எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மீளாத் துயில் கொண்ட உங்களை எம்மால் மறக்க முடியாது கலங்கி நிற்கின்றோம்.

ஐயா, அம்மா,
சகோதரர்கள், மச்சான்மார்,
மச்சாள், மருமக்கள்.

(5869)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தம்பிமுத்து துரைராசா
(பிறிலங்கா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்: 1928 - 9 - 10  மறைவு: 1987 - 9 - 2

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டு விட்ட எம் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஒரு வருடம் ஆகிவிட்டாலும் உங்கள் அன்பினால் ஏங்கித்தவிக்கும் எங்களைத் தேற்றுவார் யாரோ? உங்களைப் பிரிந்து தவிக்கும்:

அக்கா, அத்தான்,
மருமக்கள்.

அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

# விளையாட்டரங்கு

## "ஷப்ரு" கிண்ண கிரிக்கெட்

# கால் இறுதிப் போட்டியில் ஷப்ரு அணி வெற்றி

யாழ்ப்பாணம் ஆக 21

"ஷப்ரு" கிண்ணத்திற்கான யாழ் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் போட்டியின் இரண்டாவது கால் இறுதிப் போட்டியில் "ஷப்ரு" அணி வெற்றிபெற்றது.

இந்த அணி நொதேர்ண் விளையாட்டுக்கழக அணியை 23 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய "ஷப்ரு" அணி 26.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

ஏ. அன்றா கிறேசியன் 22, ஆர். விஜயேந்திரா 18, சண்முகலிங்கம் 16, எம். சி. சேரமான் 15, பி. முருகவேள் 13, ஓட்டங்களைப் பெற்றனர்.

நாதன் 3, மனோ 2, ரட்ணராஜா 2, பாலன், ரி. நரேஷ் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய நொதேர்ண் அணி 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஒ. வி. கே. எம். செந்தூர் வாசன் 23 (ஆட்டமிழக்காமல்), பாலன்14, நாதன் 13, உமாசங்கர் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆர். விஜேயேந்திரா 3, சண்முகலிங்கம் 2, வை. ஜெயந்தன் 1, ஏ. அன்றாகிறேசியன் 1, எஸ். பி. எஸ். இளங்கோ 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

முன்னர் நடைபெற்ற முதலாவது கால் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி இருப்பது தெரிந்ததே.

# ஜொனியன்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம் ஆக 21

'ஷப்ரு' கிண்ணத்துக்காக 'ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் கால்இறுதியாட்டம் ஒன்றில் யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இந்த அணி தெல்லிப்பளை கிறுஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை 7 விக்கெட்டுக்களினால்தோற்கடித்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறுஸ்கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

ரேகான் ராஜசிங்கம் 43, நாகராஜா 18, ஆர். ஸ்ரீதரன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

சி.சூரியகுமார் 2, சதீசன் 2, முரளி 2, எஸ். ரி. அகிலன் 1, ரி. சஞ்சீவன் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய ஜொனியன்ஸ் அணி 21.5 ஓவர்களில் 3விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ்.என். புவனரெட்ணம் 54, ரி. சஞ்ஜீவன்30 (ஆட்டமிழக்காமல்) எஸ். சுதாகர்22 ஓட்டங்களைப் பெற்றனர்.

கிருபாகரன் 2, மதிவண்ணன் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டிக்கு திரு. டி. எம். வேதாபரணம், திரு. எஸ். விமலதாஸன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (க)

# கொக்குவில் அணி வெற்றி

யாழ்ப்பாணம் ஆக 21

'ஷப்ரு' கிண்ணத்துக்கான மற்றுமொரு கால் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூகநிலைய அணி வெற்றி பெற்றது.

யாழ் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை கொக்குவில் அணி 22 ஓட்டங்களால் வென்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியகொக்குவில்அணி 27 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

என். ரஞ்சித்குமார் 84 (ஆட்டம் இழக்காமல்) எல். நற்குணேந்திரன் 84, ஓட்டங்களைப் பெற்றனர்.

எம் சிவராமன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 24 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது

எஸ். சுரேஸ் 46, எஸ். பி. பிரபானந்தன் 42, சுகுமார் 21, சண். தயாளன் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ். கோகுலன் 5 (இவர் தொடர்ந்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 'ஹற்றிக்' என்ற சாதனைபுரிந்தார்.எஸ் செந்தில்வேல்நாதன் 2, எஸ். கிருபானந்தன் 1, எஸ். உமாசங்கர் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்திற்கு திரு டி. எம். வேதாபரணம், திரு. விக்னபாலன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (க)

# திடீர் மழை காரணமாக வெங்காயச்செய்கை பாதிப்பு

சாவகச்சேரி, ஆக 21

மழையால் வெங்காயச் செய்கையாளர் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விளைவேலி, கல்வயல், மட்டுவில் பகுதிகளில் கிண்டியபடி தரையில் இருந்த வெங்காயமும் கிண்ட ஆயத்தமான நிலையில் இருந்த வெங்காயமும்அழுகிவிட்டன.

பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-31)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

**பொருள்:**

ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர் வளமும், தக்கவாறு அமைந்த மலையும், அந்த மலையில் இருந்து ஆறாக வரும் நீர் வளமும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாம்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 32073

21-08-1988 சு. பெ இல. 23


## ஸியாவுக்குப் பின்னர் எழும் நான்கு கேள்விகள்!

பாகிஸ்தானின் ஜனாதிபதி ஸியா உல் ஹக் விமான விபத்தில் உயிரிழந்தது ஓர் துரதிர்ஷ்ட சம்பவம்.

இரத்தம் சிந்தாத இராணுவப் புரட்சியின் மூலம் பிரதமர் அலி பூட்டோவைப் பதவி இறக்கியதிலிருந்து பதினொரு வருடங்களாகப் பாகிஸ்தானை ஆண்டவர் ஸியா.

பாகிஸ்தானை சகல விதத்திலும் ஓர் இஸ்லாமிய நாடாக்கப் போவதாகச் ஸியா ஆகப் பிந்திய கட்டத்தில் கூறிய போதிலும் அவரது தன்னிச்சை பொருந்திய இராணுவ ஆட்சியை பாகிஸ்தான் மக்களில் பெரும்பாலானோர் வெறுத்தனர். மக்கள் ஆட்சி ஒன்றை உருவாக்கவே விரும்பினர்.

ஆனால் ஸியாவின் சர்வாதிகாரம், மக்களின் ஜனநாயக உரிமைக்குரலை ஒடுக்கியது.

உள்நாட்டைப் போலவே சர்வதேச மட்டத்திலும் ஸியாவுக்குச் சார்பாக நின்றவர்களை விட எதிராக நின்றவர்களே அதிகம்.

சர்வாதிகாரத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பாஸிஸத்தையும் ஆதரிக்கும் சக்திகளும் நாடுகளும் மட்டுமே அவரை ஆதரித்தன. அவருடன் நட்புக் கொண்டாடிய நாடுகளும் அவையே.

நம்பிக்கைத் துரோகம் செய்து பூட்டோவைக் கீழே விழுத்தி விட்டு — முதுகில் குத்தி விட்டு — ஸியா பதவிக்கு வந்த 1977 இல் தான் ஜே. ஆர். அரசும் பதவிக்கு வந்தது.

ஸியா சர்வாதிகாரி இராணுவ ஆட்சியாளர் என்ற பெயர் பட்டியுடனேயே தனது தன்னிச்சையான அடக்குமுறை ஆட்சியை நடத்தினார். ஆனால் இலங்கையில் ஜனநாயகம் என்ற பெயரில் 11 வருட அடக்குமுறை தன்னிச்சை ஆட்சி நடக்கிறது.

உண்மையான ஜனநாயக ஆட்சியாக இருந்திருந்தால் தமிழர் பிரச்சினையைப் பதவிக்கு வந்த ஒருவருடத்தில் ஐ.தே.க. அரசு தீர்த்து வைத்திருக்கலாம்.

தான் நினைத்த நினைத்தவாறே எல்லாம் நடக்க வேண்டும் என்றும் மற்றவர் கருத்துக்கு, உரிமைக்கு மதிப்பளித்து நியாயமாக நடந்து கொள்ளக் கூடாது என்ற போக்குடனுமே இலங்கையிலும் ஜனாதிபதி ஆட்சி நடந்து வருகிறது.

அதனால் ஸியாவுக்கும் ஜே. ஆருக்கும் இருந்த ஒற்றுமைகள் அதிகம். அவர்கள் ஆத்ம நண்பர்களாக இருந்ததிலும் வியப்பில்லை.

ஸியா உயிருடன் இருந்த காலத்தில் அவரது பரம எதிரிகளாக இருந்த நாடுகளின் அரசினரும், தலைவர்களும் கூட இப்போது இரங்கல் உரை என்றும் அனுதாபச் செய்தி என்றும் 'அழுதிருக்கிறார்கள்'! அது வெறும் சம்பிரதாயமே அன்றி வேறில்லை!!

எப்படியாயினும்—

ஸியாவுக்கு பிந்திய பாகிஸ்தான் எப்படி இருக்கப் போகிறது என்பது தான் அரசியல் அவதானிகள் முன் எழக்கூடிய கேள்வியாகும்.

இராணுவச் சார்புடைய ஆட்சியே தொடர்ந்து நாட்டில் நிலவியது என்ற காரணத்தால், அதனையே மீண்டும் மக்கள் மீது திணிக்க மற்றொரு ஸியா உருவாகுவாரா?

அல்லது —

மக்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, அவர்களது உரிமைகளை நிலைநாட்ட வல்ல ஜனநாயகத்தைப் பேணவல்ல சக்திகள் தலையெடுக்குமா?

அதில் மக்கள் பங்களிப்பு எப்படி இருக்கும்?

பாகிஸ்தான் சம்பந்தமாக இந்த மூன்று கேள்விகளுமே முக்கியமாக முன்னெடுத்து நிற்கின்றன.

இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் எழுதுவதில் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகளும், அவற்றுக்குச் சார்பான சக்திகளும் பங்கு கொள்ளுமா என்ற நான்காவது கேள்வியும் உண்டு!

நான்கு கேள்விகளுக்கும் காலம்தான் பதில் சொல்லியாக வேண்டும். பாகிஸ்தான் மக்கள் சக்தியும், திடமும் ஒற்றுமை உள்ளவர்களாக இருந்தால் அவர்களே தனித்துப் பதில் கூற முடியும்.

### வட அயர்லாந்தில் 6 சிப்பாய்கள் பலி!

நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் பிரிட்டிஷ் ராணுவ வாகனம் ஒன்று நேற்று இரவு சிக்கி சுக்கு நூறானது.

இதில் 6 பிரிட்டிஷ் ராணுவ சிப்பாய்கள் உயிரிழந்தனர். 26பேர் காயமடைந்தனர்.

வட அயர்லாந்தில் இத்தாக்குதலை ஐரிஷ் இராணுவம் நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. (எ)

தனி அறை அமைத்து

# டில்லியில் டெலிபோன் ஒட்டுக் கேட்பு; ஹெக்டேபோல் ராஜீவும் ராஜினாமாச் செய்வாரா?

## எதிர்க்கட்சி எம். பிக்கள் வற்புறுத்து

புதுடில்லி, ஆக. 20

புதுடில்லியில் இரண்டாயிரம் பேரின் டெலிபோன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய அரசின் உத்தரவின்பேரில் தான் இந்த ஒட்டுக் கேட்பது இடம்பெறுவதாகமேலும் அறிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர்கள், காங்கிரஸ் அதிருப்தித் தலைவர்கள், முக்கியமான பத்திரிகையாளர்கள் சந்தேகப்படும்படியான அரசு உயர் மட்ட அதிகாரிகள் உட்பட இந்த 2 ஆயிரம் பேரின் டெலிபோன் பேச்சை ஒட்டுக் கேட்டு ஒலிப்பதிவு செய்வதற்கான ஏற்பாட்டை மத்திய அரசுசெய்திருக்கின்றது.

இதை மத்திய அரசின் புலனாய்வுத்துறை வட்டாரங்களே தெரிவித்துள்ளன.

இதற்காக 'ஈஸ்டர்ன் கோஸ்ட்' என்ற பகுதியில் உள்ள தொலைபேசி, தொலைத் தொடர்புத் துறை அலுவலகத்தில் ஒரு தனிஅறையே ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

இந்தச் அறையில் 'மாஸ்டர் கண்ட்ரோல்' அமைக்கப்பட்டு டெலிபோன் பேச்சுக்கள் ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன.

இங்கு பொருத்தப்பட்டுள்ள சாதனங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. மிக நவீனமானவை.

இந்தச் சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஒலிப்பதிவு செய்வதை டெலிபோன் சந்தாதாரர்களே உணர முடியாது.

கர்நாடகத்தில் டெலிபோன் ஒட்டுக்கேட்ட புகார் சம்பந்தமாக முதலமைச்சர் பதவியை ராமகிருஷ்ண ஹெக்டே ராஜினாமாச் செய்தது போன்று, பிரதமர் பதவியை ராஜீவ் காந்தியும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் வற்புறுத்திக் கேட்டுள்ளன.

### மொங் மொங் புதிய தலைவர்!

ரங்கூன், ஆக. 20

பர்மாவின் புதிய ஜனாதிபதியாக திரு மொங் மொங் நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் வானொலியில் உரையாற்றுகையில், கடந்த 26 ஆண்டுகளாக நடந்ததாகக் கூறப்படும் தவறுகளை விசாரிக்கப் போவதாக அவர் கூறினார்.

ஏற்கனவே திரு.மொங் ஆளும் சோஷலிச புரோகிராம் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். (எ)

## ஆஸாத்தின் 30 பக்க 'மர்மம்' நீங்குகிறது!

புதுடில்லி, ஆக. 20

இந்தியாவின் முன்னாள் கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆஸாத் எழுதிய சுய சரிதையில் வெளியிடப்படாதிருந்து வந்த 30 பக்கங்களை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத்தடையை நேற்று புதுடில்லி உயர் நீதிமன்றம் ரத்துச்செய்து விட்டது.

அபுல்கலாம் ஆஸாத் 30 ஆண்டுகளுக்கு முன் தன் சுய சரிதையை வெளியிட்டார்.

அதில் 30 பக்கங்களை 30 ஆண்டுகளுக்குப் பின் (1988 பெப்ரவரி) வெளியிடவேண்டும். என்று உயிலில் எழுதி வைத்திருந்தார்.

கடந்த பெப்ரவரியில் அந்த 30 பக்கங்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. அந்தத்தடையையே உயர் நீதிமன்றம் இப்போது ரத்துச் செய்து விட்டது. (எ)

## பாகிஸ்தான் புதிய அரசுத் தலைவர் ஸியாவின் விசுவாசி

இஸ்லாமபாத், ஆக. 20

பாகிஸ்தானின் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ள குலாம் இஷாக் கான், மரணமான ஸியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

73 வயதான குலாம் கான், 1977 இல் சுல்பிகார் அலி பூட்டோவைப் பதவியில் இருந்து அகற்றிய ஸியாவின் ராணுவச் சதித்திட்டத்துக்கு ஆணிவேராக இருந்து செயல்பட்டவர் என்று அறிவிக்கப்படுகிறது.

வட்டி அறவிடாத வங்கித்திட்டம், நாட்டை இஸ்லாமியப் படுத்துதல் ஆகிய திட்டங்களின் சூத்திரதாரி குலாம் இஷாக்கான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1971-74 வரை பாகிஸ்தான் மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகித்த குலாம்கான் செனட் தலைவராக ஸியாவினால் நியமிக்கப்பட்டார்.

அதிபர் ஸியா இல்லாத நேரத்தில் பதில் தலைவராகக் கடமையாற்றும் உரிமை செனட் தலைவருக்கே உண்டு என்பதால் அவர் பதில் அதிபராக நியமிக்கப்பட்டார். [எ]

### ராஜீவின் பிறந்த தினம்

புதுடில்லி, ஆக. 20

பிரதமர் ராஜீவ் காந்தியின் 45ஆவது பிறந்த நாள் இன்று20 ஆம் திகதி.

அதிபர் ஸியாவின் மரணம் காரணமாக பிறந்த நாளை அவர் கொண்டாடவில்லை.

வீட்டுக்கு வந்துவாழ்த்துக் கூற வேண்டாம் என்று பிரதமர் அன்பர்களைக் கேட்டிருந்தார்.

இதனிடையில் உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தனது 71ஆவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடினார். (எ)

## கொரியா இணைப்பு; எல்லையில் பேச்சுக்கள்

சோல், ஆக. 20

தென்கொரியா, வடகொரியா அரசுகளின் நாடாளுமன்றத் தூதுக் குழுக்கள் முதல் தடவையாக இணைப்புப்பற்றி இன்று பேச்சுக்களை நடத்தின. இரண்டு கொரியாக்களின் இணைப்புப் பற்றி அரசு மட்டத்தில் இடம்பெற்ற முதலாவது பேச்சுவார்த்தை இதுவாகும்.

இரண்டு நாடுகளின் சர்வதேச எல்லைக்கோட்டில் உள்ள கிராமம் ஒன்றில் இரண்டு குழுக்களும் சந்தித்து 3 மணி நேரம் பேசினர். முடிவு எதுவும் இன்றி பேச்சுக்கள் முடிவடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

### குவேல் மீது குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஆக. 20

குடியரசுக்கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளரான திரு. குவெல் வியட்னாம் யுத்தத்தின் போது அமெரிக்க ராணுவத்தில் சேர மறுத்து விட்டாராம்.

இந்தக் குற்றச்சாட்டை பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்றில் திரு. குவெல் மறுத்துள்ளார்.

அமெரிக்க அரசமைப்பின் படி ஒவ்வொரு பிரசையும் குறிப்பிட்ட காலத்துக்கு கட்டாய ராணுவ சேவை செய்ய வேண்டும்.

அதை திரு. குவெல் மீறி விட்டார் என்பதே குற்றச்சாட்டு. [எ]

**வெளி உலகில்**

### ஸ்ரீநகரில் காலவரையற்ற ஊரடங்கு

ஸ்ரீநகர், ஆக. 20

காஷ்மீர் மாநிலத் தலைநகரான ஸ்ரீநகரில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு ஆதரவாக கிளர்ச்சிக்காரர்கள் வன்செயலில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே, ஊரடங்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இராணுவம் ஸ்ரீநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளது.

கிளர்ச்சிக்காரர் மீது இராணுவம் சுட்டதில் இரண்டு பேர் பலியானார்கள். (ஒ-எ)

# சேமமடுவில் சுற்றிவளைப்பு பொதுமக்கள் இடம் பெயர்வு

வவுனியா, ஆக. 21

சேமமடுவையும் அதைச் சூழ்ந்த பகுதிகளையும் இந்திய அமைதிப் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி வருவதை அடுத்து அப்பகுதியிலிருந்து மக்கள் பீதியினால் வெளியேறத் தொடங்கியிருக்கிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை முதல் சேமமடு முதலாம் படிவம், சேமமடு இரண்டாம் படிவம், ஆறுமுகத்தான் புதுக்குளம், நொச்சிக்குளம், மறையடித்தகுளம், மாளிகை அலைக்கல்லு போட்ட குளம், பெரிய புளியங்குளம், இளமருதங்குளம் ஆகிய கிராமங்களை இந்தியப் படையினர் சுற்றி வளைத்துள்ளனர்.

இப்பகுதிகளில் வீடு வீடாகத் தேடுதல் நடைபெறுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதி மக்கள் பீதியினால் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இப்படி பீதி காரணமாக இளமருதங்குளத்தைச் சேர்ந்த 40 குடும்பங்கள்— சுமார் 200 பேர்— புதனன்று இரவோடிரவாக வெளியேறி, ஏழுமைல் தூரம் நடந்து ஓமந்தை மாணிக்கவளவை வந்தடைந்தனர். அங்கிருந்து அவர்கள் பஸ் மூலமாக வவுனியா வந்து சேர்ந்தார்கள்.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் தஞ்சமடைந்துள்ள இவர்களுக்கு போரூட், சர்வோதயம் ஆகிய பொதுநிறுவனங்கள் உணவு கொடுத்து உதவி வருகின்றன. (உ- 164)

### ஜே. ஆர். செய்தி: கஷ்டத்தில் உதவியவர் அதிபர் ஸியா

கொழும்பு, ஆக. 21

இலங்கையின் கஷ்ட காலத்தில் உறுதுணையாக இருந்தவர் அதிபர் ஸியா - உல் - ஹக்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு செய்தி விடுத்துள்ளார்.

''பத்து ஆண்டுகளாக என்னுடைய நெருங்கிய நண்பராக அதிபர் ஸியா விளங்கினார்'' என்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். (ஒ-எ)

### அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் கூட்டம்

காங்கேசன்துறை' ஆக21

அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 31 ஆவது வருடாந்தக் கூட்டம் இன்று 21 ஆம் திகதி யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

அஞ்சல் அதிபர்களின் பதவியுயர்வு, மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதுடன் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும். (ஒ-68)

### லண்டன் பயணமானார்

யாழ்ப்பாணம் ஆக. 21

யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பிரதம கணக்காளர் திரு. ம. ஆலால [illegible] விடுமுறையில் [illegible] பெற்று லண்டன் சென்றுள்ளார். (ஒ-க)

### விஜயநாதன் பற்றி இன்னும் தகவல் இல்லை

திருகோணமலை, ஆக 21

கடந்த 3 ஆம் திகதி முதல் காணாமல் போன திருமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு.பா. விஜயநாதன் (70 வயது) பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை.

அன்றைய தினம் நகரசபை மண்டபத்திலுள்ள பிரஜைகள் குழு அலுவலகத்தில் இருந்த போது எவரோ ஒருவர் வந்து அழைத்ததை அடுத்து வெளியே சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லை.

அதன் பின்பு மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து தபால் நிலைய வீதியாலும் பின்னர் உள்துறைமுக வீதியாலும் இவர் சென்றதைப் பலர் கண்டிருக்கின்றனர்.

அதன் பின்பு இன்று வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை

இதனிடையில் பிரஜைகள் குழுவினர் திரு. விஜயநாதனை மனிதாபி[illegible] விடுதலை செய்யும் படி [illegible] விடுத்துள்ளனர். (இ-150)

### சமய சந்நிதிகளில்

### நாரந்தனை மனோன்மணி அம்மன் மகோற்சவம்

யாழ்ப்பாணம். ஆக. 21

நாரந்தனை ஸ்ரீ மனோன்மணியம்மன் வருடாந்த மஹோற்சவம் 17 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்களாக நடைபெறும் உற்சவத்தில் 25 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் நடைபெறும்

27 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் திருவிளக்குப் பூஜையும் காப்புக் கட்டுதலும் இடம் பெறும்.

### ஆதி வைரவர் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக 21

ஊர்காவற்றுறை கிழக்கு அருள்மிகு ஆதி வைரவர் தேவஸ்தான மகாகும்பாபிஷேக விழா கடந்த 6-7-88 இல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை திங்கட்கிழமை அஷ்டோத்திர சங்காபிஷேகவிழா விமரிசையாக நடைபெறும். (ஒ-10)

### வயாவிளான் ம.வி. நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக21

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் மூன்றும் தவணைக்காக நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. [உ-க]

## விதை நெல் தேவையானோர் பதிவு செய்து கொள்ளுங்கள்

### அரசாங்க அதிபர் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஆக. 21

1988/89 காலபோகத்திற்கு விதை நெல் தேவையானவிவசாயிகள் தமக்குத் தேவையான விதைநெல்லின் அளவை தத்தமது கமநலச்சேவை நிலையங்களில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

விவசாயிகள் தமது பெயர், செய்கை பண்ணப்படும் காணியின் விஸ்தீரணம், தேவையான நெல்லின் அளவு ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டும்.

கடந்த கால போகம் பாதிப்படைந்ததனால், கையிருப்பில் உள்ள கவிதை நெல்லை முடிந்தளவு பாவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கூலி உட்பட ஒரு புசல் விதை நெல் 140/- ரூபா முதல் 150/-ரூபா வரை விற்கப்படும் என்றும்—

மேலதிக விவரங்களுக்கு கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடனும், விவசாயத் திணைக்கள போதனாசிரியர்களுடனும் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-க)

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

### கால கண்டன் கண்ணில் கனிந்த குமரேசா!

ராகம்:- பாகேஸ்வரி தாளம்:- ஆதி

பல்லவி

ஆற்றுவ தாரையா போக்கிட மேதையா?
ஏற்றவன் நீயே ஐயா - முருகையா?
[ஆற்...]

அனுபல்லவி

காலகண்டன் கண்ணில் கனிந்த குமரேசா!
கார்த்திகைக் கன்னியரைக் கவர்ந்த குகனேசா!!
[ஆற்...]

சரணம்

மானிடனாய்ப் பிறந்து மானிடனாய் வளர்ந்தேன்!
வீணிடமே அலைந்து நானிடர்கள் அடைந்தேன்!!
நேரிடர் போகாதோ? வாடிடல் காணுமோ?
சேரிட முன்னையல்லால் வேறில்லை நல்லைக் கந்தா!!
[ஆற்...]

—முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :–: யாழ்நகர்.

# உதயன்

21 - 08 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :–: யாழ்நகர்.

## முல்லைத்தீவுப் பகுதிக் கிராமங்களில் தேடுதல் மேலும் தீவிரமடைகிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கிராமப்புறங்களில் இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாகக் கிராமப் பகுதிகள் பல அமைதியிழந்து காணப்படுவதாகவும், பாடசாலைகள், கடைகள், அரசஅலுவலகங்கள் மூடப்பட்டுக் கிடப்பதாகவும், அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிலபாடசாலைகளில் படையினர் முகாமிட்டிருப்பதன் காரணமாக அவை நிரந்தரமாக இயங்க முடியாத நிலையில்உள்ளன என்றும் சொல்லப்பட்டது.

தினமும் முல்லைத்தீவுக் காட்டுப்பகுதிகளைநோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் படுவதன் காரணமாக விறகு வெட்டும் தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கானபடையினர் முல்லைத்தீவுப் பகுதிகளுக்குள் ஊடுருவி தேடுதல் வேட்டையிலீடு பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கடற் பகுதியிலும் இந்திய கடற் படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனல் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சாதாரண ஏழைத் தொழிலாளர்கள் தமது கிராமங்களை விட்டு வெளியேறிநகரப்புறத்துக்கு வந்துள்ளதால் தொழில்தேடி திரியும் நிலையும் உருவாகி உள்ளது. (ஒ–10)

''ஷப்ரு'' கிண்ண கிரிக்கெட்
★ இறுதிப் போட்டி ★
''ஷப்ரு'' கிண்ணத்துக்கான
யாழ். ஜொலிஸ்ரார்
விளையாட்டுக் கழகம் நடத்தும்
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின்
40 ஓவர்களைக் கொண்ட இறுதியாட்டம்
இன்று ஞாயிற்றுக்கிழமை
காலை 9. 00 மணிக்கு
யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க
எதிர்
யாழ்- ஜொனியன்ஸ் வி. க
மைதானத்தில் ரசிகர்களுக்கான
புதிர்ப் போட்டி ஒன்றும் காத்திருக்கின்றது
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

BECON
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பகல் நேர வகுப்பு
G. C. E. O/L - 88
2 - ஆவது பிரிவு
ஆரம்பம்: 22-08-88
திங்கள் 7-30 a .m
கேத்திரகணிதம் - அளவையியல்
தயாபரன்
விஞ்ஞானம் - உயிரியல் பகுதி
[இயைவாக்கமும் சமநிலையும்]
சுகாதாரம்
ரவி
தமிழ் சமயம் — தாஸ்
சமூகக்கல்வி வர்த்தகம் — மகேஸ்
ஆங்கிலம் — ஜெயக்குமார்
(C6266)

### ஒட்டுசுட்டானில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
முல்லைத்தீவு அரச அதிபருக்கு முறையிட்டு, அவரால் வழங்கப்பட்ட கடிதத்தை ஏற்க மறுத்ததை ஆட்சேபித்துமே- இந்த அடையாள உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் தாய், மனைவி. மக்கள், உறவினர்கள் இந்த உண்ணு விரதத்தை மேற்கொண்டனர்.

பிற்பகலளவில் இராணுவ பொறுப்பதிகாரியிடம் இவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

அடையாள உண்ணு விரதத்துக்கு பலன் கிடைக்கவில்லையெனின் தான்தோன்றி ஈஸ்வரர் கோவிலில் தொடர்ச்சியாக உண்ணுவிரதம் இருக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

வே. துளசிநாதன் (23 வயது) வே மோகனதாஸ் (20 வயது) இ. சந்திரன் (25 வயது) வே. ரவீந்திரன் (23 வயது) சி. அமிர்தலிங்கம் (27 வயது).

ம. ரவிச்சந்திரன் (22 வயது) நா. கிருபாகரன் (22 வயது) சி. சிவராசா (17 வயது) து ஸ்ரீரஞ்சன்(24 வயது) எஸ். சுப்பிரமணியம் (22 வயது) ஆர். கோவிந்தசாமி (27 வயது).

(ஒ-113)

### யாழ்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

யாழ்ப்பாணத் தாதிகள் பயிற்சிக் கல்லூரி சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்றது. இங்கே மிகக் குறைந்த அளவினரே பயிற்றுவிக்கப் படுகின்றார்கள். இவர்களில் ஒருசிறு எண்ணிக்கையினரே யாழ். போதனு வைத்தியசாலைக்குக் கடமைபுரிய அனுப்பப் படுகின்றனர். ஏனையோர் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளுக்கு அனுப்பப் படுகின்றனர்.

தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்றுவிக்கப் படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படாதவிடத்து யாழ் போதனு வைத்திய சாலையில் உள்ள தாதிமார் பற்ருக்குறையை ஒருபோதும் தீர்க்கமுடியாது என்றும் அந்தவட்டாரங்கள் தெரிவித்தன, (ஒ–5)

## கிணற்றில் விழுந்து குழந்தை பலி!

யாழ்ப்பாணம் ஆக 21

ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று கிணற்றினுள் விழுந்து மரணமானது.

நேற்று பெருமாள் கோவிலடியில் இச் சம்பவம் நடைபெற்றது.

சூரியகுமார் சுபாஸ் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது. (ஒ-10)

### சிறையில்.,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விபரங்கள் கடித மூலம் மேற்குறித்த குடும்பங்களுக்கு அரச அதிபரினுல் அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுபுடைவைப்பார்சல் விநியோகத்தின் போது அரச அதிபரின் பிரதிநிதி ஒருவரும் சமுகமாயிருப்பார். (ஒ-10)

### இறுதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மூலம் இந்த இரு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

கொக்குவில் அணி யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தையும்- ஜொனியன்ஸ் அணி 'ஷப்ரு' அணியையும் அரை இறுதிப்போட்டிகளில் வென்றன. (ஒ-க)

### வவுனியா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
றிக் கொண்டு ஒரு ரயில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

அதில் 90 ஆயிரம் லீட்டர் டீசல், 90 ஆயிரம் லீட்டர் மண்ணெண்ணெய், 45 ஆயிரம் லீட்டர் பெற்ரோல் என்பன கொண்டு வரப்பட்டன.

ஆனல் கடந்த 13ஆம் திகதி மாங்குளத்தில் ரயில் பாதை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால் ரயில்கள் எதுவும் யாழ்ப்பாணம் வரவில்லை.

கடைசியாக ரயில் மூலம் வந்த எரிபொருள்களின் அளவு யாழ் மாவட்டத்தின் தேவைக்கு இரண்டு நாட்களுக்கு மாத்திரமே போதுமானதாக இருந்தது.

#### கையிருப்பு

தற்போது கையிருப்பில் உள்ள டீசல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒரு சில நாள் தேவைகளுக்கு வழங்கவே போதுமானதாக இருக்கிறது.

அத்துடன் அத்தியாவசிய தேவைகளுக்கு வழங்குவதற்காக 1, 850 லீட்டர் பெற்ரோல் அண்மையில் கிளிநொச்சியிலிருந்து அவசரமாகப் பெறப்பட்டது. இந்தப் பெற்ரோல் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே விநியோகிக்கப்படும்.

இதேவேளையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக பயிர்ச்செய்கைக்கானகாணி சீர்படுத்தல் உழவுவேலைகள் அடுத்த மாதத் தொடக்கத்தில் ஆரம்பமாக உள்ளன. அதற்கென 90 ஆயிரம் லீட்டர் டீசல் தேவைப்படுகிறது இந்தத் தேவைகளை உடனடியாகக் கவனிக்காவிடில் விவசாய உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு அதன் மூலம் வடமாகாணம் உணவுத் தேவையில் பெருமளவு பாதிக்கப்படும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு எரிபொருள்களை ரயில் மூலம் வவுனியா வரை கொண்டு வந்து அங்கிருந்து பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களின் பவுசர்களின் மூலம் இங்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடு குறித்து கொழும்பு மாநாட்டில் இறுதி முடிவு எடுக்கப்படும். (அ-ஐ-9)

### விடுதலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அதற்காக இந்திய–இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தம் இப்பிராந்தியத்தின் அமைதிக்கும் இந்தியாவின் பாதுகாப்புக்கும் உறுதி அளிக்கின்றது,

இப்படி அமைச்சர் பந்த் சொன்னர்.(ஒ-எ)

## ருத்ரா வங்கித் தலைவர்

கொழும்பு, ஆக. 21

இலங்கை அரச அடமான, முதலீட்டு வங்கியின் புதிய தலைவராக திரு. ருத்ரா ராஜசிங்கம் நியமிக்கப்பட்டார்.

திரு. இராஜசிங்கம் முன்னுள் பொலீஸ்மா அதிபர் ஆவார்.

## 3 நாட்களில் 41 துப்பாக்கிகள் களவு

இம் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை பொனருகலை மாவட்டத்தில் மட்டும் 41 துப்பாக்கிகள் களவாடப்பட்டன என்று இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## மாத்தளையில் மூவர் பலி!

மாத்தளையில் கடந்த வியாழன் நள்ளிரவு இனந் தெரியாத நபர்கள் சிலர் ஒரு வீட்டினுள் புகுந்து தாறுமாருகச் சுட்டனர். அப்போது மூன்று பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### பளையில்,...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கிழமை இயக்கச்சி, முகாவில், பண்ணை. காரையம்பாதி ஆகிய இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீடுகளிலிருந்து ஆண்கள்கூட்டிச் செல்லப்பட்டு தலையாட்டி முன் நிறுத்தப்பட்டார்கள். (ஒ - 144)

### யாழ்- கொழும்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
டும்.

குறிக்கப்பிட்ட கட்டணங்களை விட மேலதிகமான கட்டணங்களை ஒரு பஸ் வசூலித்திருக்கிறது என்று பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பஸ் இந்திய அமைதிப் படையினரால் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஒ- ஐ)

### சங்கானை சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம் ஆக 21

சங்கானை, சித்தன் கேணி, பிரான்பற்று பகுதிகள் நேற்று அதிகாலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன.

இளைஞர்கள் வீதிகளுக்கு அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

பின்னர் அநேகமானேர் விடுவிக்கப்பட்டனர். கைதானவர்கள் குறித்து விவரம் தெரியவில்லை. (ஒ)

## சாவகச்சேரியில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், ஆக.21

வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரி சந்தைப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரை நோக்கி கிரனேட் வீசப்பட்டது.

கிரனேட் தாக்குதலை அடுத்து படையினர் அங்கு நின்ற பொது மக்களைக் கடுமையாகச் சோதித்தனர்.

இதேவேளை வெள்ளிக்கிழமை இணுவில் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து படையினர் திருப்பிச் சுட்டனர்.

இதனல் இரண்டு பேர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (ஒ–10)

### லியாவின்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி
அமைச்சர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

இந்திய ஜனதிபதி, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி. பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி, ரஷ்யாவின் உபஜனதிபதி ஆகியோர் அவர்களில் சிலர்.

லட்சக் கணக்கான பாகிஸ்தானிய மக்களும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டனர். (அ)

### செயலகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கல், குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு மரணச்செலவுக்கான நிவாரணக் கொடுப்பனவு வழங்கல் என்பன இடம்பெறும்.

வழமைபோல் மாத இறுதி வரை செயலகம் இயங்கும். (ஒ–10)

## ஜேம்ஸ் அன்ரனி ஜோசப் அருமைநாதன்

(ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு ஜேம்ஸ் அருமைநாதன் அவர்கள் ஆவணி 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை அகால மரணமானர். இவர் மேரிபிறிமா இரத்தினமணியின் (ஆசிரியை, யாழ் சன் மார்க்க மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், பேர்ணுட் டிலான், லெனர்ட்ஜெயான் ஆகியோரின் நேசத் தந்தையும், சில்லாலை திரு. நீ. ஜேம்ஸ் (இளைப்பாறிய கல்லூரி அதிபர்) திருமதி. மார்கிறேற் ஜேம்ஸ் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின்அன்பு மகனும், நாரந்தனை காலஞ்சென்ற A. S. பிரான்சிஸ், திருமதி. இரத்தினம் பிரான்சிஸ் அவர்களின் அன்பு மருமகனும், திலகநாதன், வசந்தி அல்போன்சஸ், குணநாதன் ரஞ்சினி சாமிநாதர், மல்லிகா வென்சஸ்லோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் Dr.J. அல்போன்ஸ்சஸ் அத்தனசியார், போல் சாமிநாதர். Dr.S. வெண்சஸ்லோஸ், இயூபிரேசியா திலகநாதன், விஜேந்திரினி குணநாதன், Dr. F.J.N.இரத்தினராஜா, றேஸ் பாலாஜி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னரது பூதவுடல் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு 239/A ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அன்னரின் இல்லத்திலிருந்து புனித பத்திரிசியார் கல்லூரி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிச் சடங்கின் பின் பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(5835)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னச்சிப்பிள்ளை கந்தையா

இணுவிலைச் சேர்ந்த திருமதி. சின்னச்சிப்பிள்ளை கந்தையா அவர்கள் 12- 8- 88ல் காலமானர். இவர் கந்தையாவின் அருமை மனைவியும், க. செல்வரத்தினம், சரசுவதி, பாலசுந்தரம், பூமணி, கண்மணி, நடராசா, தருமலிங்கம், யோகராணி, சூரியகாந்தி, பரமசிவம் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் பராசக்தி, கந்தையா, மனேரஞ்சிதம், துரைசிங்கம், சிவலிங்கம், புஸ்பராணி, ரஞ்சினி, ஜெயவீரசிங்கம், தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். பூதவுடல்நாளை22-8-88 திங்கட்கிழமை அன்னரின் இல்லத்திலிருந்து காலை 10 மணியளவில் தாவடி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:- க. கந்தையா

துரைவீதி,
இணுவில் தெற்கு,
இணுவில். (5837)

### சுப்பிரமணியம் பரமசிவம்பிள்ளை (பிள்ளையார்)

பிள்ளையார் ரூரிஸ்ட் அன் லேணேர்ஸ் உரிமையாளர் திரு சுப்பிரமணியம் பரமசிவம் பிள்ளை (பிள்ளையார்) 20-8-88 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னர் ஞானசவுந்தரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சரோஜினிதேவி, சிறிஸ்கந்தராஜா, சந்திரகுமாரி (பிரான்ஸ்), ஜெயகுமாரி (கனடா), விஜயகுமாரி (கனடா), சிறீதர், சிறீகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜரட்ணம் (பிள்ளையார் லேணேர்ஸ் அத்தான்), ரகுநாத் (பிரான்ஸ்), பிரான்சில் காலஞ்சென்ற கேந்திரகுமார், விஜயராஜ் (கனடா), ஆனந்தகுமார் (கனடா), தில்லைநாயகி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். ஈமக்கிரியைகள், இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் செம்மணிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்ருர்கள்.

தகவல்:
காந்தன் (மகன்)
அத்தான் (மருமகன்)

கோப்பாய் தெற்கு,
கட்டைப்பராய். (5842)

### திரு. இராசலிங்கம் குணராசா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு. இராசலிங்கம் குணராசா (ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலய அபிவிருத்திச் செயலாளர்) 1988 – 08 – 19 இல் காலமானர். இவர் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் பேரின்பராஜ், புவனராஜ், சிவஞானராஜ், யாழினி, லோகேந்திரராஜ், சிவஅருள்ராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும், தேவராசா, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மலிங்கம், லோகராணி, கந்தையா, இராஜதுரை, கனகராஜா, காலஞ்சென்ற கனகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார். தகனக்கிரியைகள் 1988- 08- 21 ஞாயிறு பிற்பகல்2 மணியளவில் கோண்டாவில் கிழக்கு மயானத்தில் இடம் பெறும்.

தகவல்:
சு. தர்மலிங்கம்

கோண்டாவில் கிழக்கு. (5880)

### Obituary Notice
**St. Patricks College**

The Remains of

**James A. J. Arumainathan**

(Teacher - St. Patrick's College)

Will be removed from his residence, 239/A, Hospital Road, Jaffna, at 8. 30 a.m on Monday. The 22 nd August to St. Patrick's College where funeral Mass will be offered. Thereafter his remains will be laid to rest at St. Mary's Burial Grounds.

The old boys, his friends, and well wishers. are kindy requested to assist at the Funeral Services.

Rector
St. Patrick's College

(C.6308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில் 21 08 – 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Sunday 21st August 1988.